உ

கடவுள் துணை

வால்மீகமுனிவர் பார்வதிக்குரைத்த

# கேதாரி ஈஸ்வரர் நோன்பு நாடகம்

இது

கூடலூர்தாலுக்கா

செம்மங்குப்பம் சான்றோர்குலம்

ரா. சுப்பராய நாடார் குமாரர்

**S. ஷண்முகம் உபாத்தியாயரால்**

இயற்றப்பட்டது.

total page 64.

ACESS NO: 97442

**A. முத்துவடிவேல் முதலியாரால்**

சென்னை

**பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்**

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1935 [விலை அணா 6

# ரிஜிஸ்டர் காபிரைட்

இதனால் சகலமான அச்சுக்கூடத்ததிபர்கட்கும் மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்:- ம-ா-ா-ஸ்ரீ, கூடலூர்தாலுக்கா செம்மங்குப்பம் சான்றோர்குலம் S. ஷண்முகம் உபாத்தியாயர் அவர்களால் இயற்றிய "வால்மீகமுனிவர் பார்வதிக்குரைத்த கேதாரீஸ்வரர் நோன்பு நாடகம்" ஆகிய இப்புத்தகத்தை ஷெயாரிடம் சகல சுதந்தரமும்பெற்று அடியிற்கண்ட என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தை மகாகனம்பொருந்திய கவர்ன்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் செய்திருக்கின்றேன். ஆகையால் இப்புத்தகத்தை என்னுத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது.

இப்படிக்கு

A. முத்துவடிவேல் முதலியார்

24, தாண்டவராயப்பிள்ளை தெரு, சென்னை

874

## சாற்றுக்கவி

கூடலூர்தாலுக்கா செம்மங்குப்பம் தமிழ்வித்வான்

மு. கோபால்சாமிநாடார் அவர்கள் இயற்றியது

நேரிசை வெண்பா

கேதாரி நோன்புச் சரிதையை நாடகமாய்
தோதாகப் பாடித் துகளருத்தான்—வேதாவும்
ஈன்ற வியன்ஞாலத் தோங்கு மிசையுடையோன்
சான்றவன் சண்முகன் தான்.

உ

கடவுள் துணை

## வால்மீகமுனிவர் பார்வதிக்குரைத்த

# கேதாரி ஈஸ்வரர் நோன்பு

# நாடகம்

கணேசமூர்த்தி காப்பு விருத்தம்

சீரோங்கும்வால்மீகர் சத்திக்குத்தானுரைத்த
தாரோங்குகேதாரி சரிதைதனைநாடகமாய்
பாரோங்கபாடுதற்கு பழுதொன்றும்வாராமல்
ஏரோங்குகணபதியை இறைஞ்சுவோமே.



பரமன் வருகிற கவி

அத்தியையுரித்தநாதன் அகிலத்தில்படியளக்க
மெத்தவேதானெழுந்து மெய்யினில்வெண்ணீறுபூசி
நத்தியேமுனிவர்தேவர் நாடியேபோற்றிசூழ
சத்தொடுசித்தானந்த சங்கரன்வருகின்றாரே.

பரமன் தரு

சந்திரனைசடையில் விந்தையுடன்தரித்த
சாம்பசிவமூர்த்தியும்வந்தார் கைலைவாசர்
சாம்பசிவமூர்த்தியும்வந்தார்

சுந்தரமூர்த்திக்காக தூதுசென்றநாதன்
சுருள் தொண்டர்கள்பலர் தெண்டம்செய்திட
அண்டர்முனிவரும் கண்டுபுரிந்திட சா

நீண்டசடைமுடியும் நிகரில்லாசூலம்வந்தி
கண்டோர்அதிசயிக்க கர்த்தன்எறும்கந்தி

சுருள் காவலாய்யாவரும் ஆவலாய்சூழ
தாவியேபூத கணங்களும்தாழ சா

கரத்தில்மான்மழு சமண்டலமும்பிடித்தேன்
அரக்கர்களைமடிக்க திரிபுரத்தையெரித்தேன்

சுருள் ஆலத்தையுண்டு அமரரைக்கார்த்தேன்
சிலமாய்காளியை வாதாடிசெயித்தேன் சா

பண்டுமுனிவரெல்லாம் கண்டுஎந்தனைபோற்ற
தொண்டர்ரிஷிகளெல்லாம் துதித்துமலரைசாற்ற

சுருள் சுந்திரபார்வதி சிந்தைமகிழ்ந்திட
தந்திரநாரதர் வந்துபுகழ்ந்திட சா

பரமன் கவி

திருவடிபணிந்துநின்ற தேவரேசொல்வேன்கேளீர்
பெருமையாயுலகில் புனிதரேவாழ்ந்திருப்பீர்
கருமுகில்வண்ணன் தங்கை கன்னிபார்வதிமாதை
விரும்பியேயழைத்தேனென்று மெல்லியைவரச்சொல்வீரே.

வசனம்

ஆனால் கேளும் தேவர்களே! என் பாதம் பணிந்தபடியால் சுகமாக வாழ்குவீர்கள் பார்வதியை சீக்கிரம் அழைத்து வருவீர்கள்.



## பார்வதி வருகிற விருத்தம்

மலைதனைகுடைபிடித்த மாயவன்தங்கையான
கலைமுகவதனமுள்ள கன்னியாள்தானெழுந்து
பலவிதமல்லிகைமுல்லை பாரிஜாதபுஷ்பஞ்சூடி
இலகியபணிகள்பூண்டு ஈஸ்வரிவருகின்றாளே.

## பார்வதி தரு

பாதிமதியணிந்த ஆதிசிவன்தேவியான
பார்வதியம்மன்வந்தாள் உலகமாதா
பார்வதியம்மன்வந்தாள்

சாதிமல்லிகைசூடி சங்கரன்பாதம்கோரி
சுருள் சந்தனகளப வாடையும்வீச
விந்தையாய்மந்திர மறைவர்பேச பா

அகிலத்தில்சிறந்த அன்னம்போலநடையாள்
பகரும்கதலியின் திகழும்மிகதுடையாள்
சுருள் பாதமதில்தண்டை கீதங்கள்பாட
நாதனைகாண நங்கையும்நாட பா

கங்கணவளையல் கரத்தில்மிகஇலங்க
தங்கபதக்கம்முத்து தாவடமுங்குலுங்க
சுருள் தாங்கியகுயிலென ஓங்கிடும்தொனியாள்
பாங்குள்ளமயிலென சாயல்இனியாள் பா

இன்றையநாளில்நாதன் என்னையழைத்தசேதி
கன்னியாளும்சென்று களிப்பாயறியநீதி
சுருள் காதலாய்கன்னி மாருடன்கூடி
சீதரன்தங்கை வருகிறேன்நாடி பா

## பார்வதி விருத்தம்

அந்தமாய்கைலைதன்னில் அருந்தவமுனிவர்சூழ
சுந்தரமாயிருக்கும்நாதா திருவடிதன்னில்மாது
விந்தையில்மிகுந்தரோஜா வெட்டிவேர்மலர்கள்சாற்றி
வந்தனம்செய்துநின்றேன் வஞ்சியைகார்த்திடீரே.

## வசனம்

சரணம் சரணம் பிராணபதியே! எந்தனை அழைத்த சேதிகளை சொல்லவேண்டும் நாதனே.

## பரமன் கவி

பாதமேபணிந்துநின்ற பார்வதிமாதேகேளாய்
பூதலத்தில்கீர்த்தியோங்க பூவைநீவாழ்ந்திருப்பாய்
வேதமாமுனிவர்சித்தர் விண்ணவர்நம்மைகாண
நீதமும்வருவதாலே நங்கைநீவீற்றிருப்பாய்.

## வசனம்

ஆனால் கேளும் பார்வதி! என்பாதம் பணிந்தபடியால் சுகமாக வாழ்குவாய் நம்மைகாண தேவர் வருவார்கள் இடபாகத்தில் வீற்றிரும் மாதே.

பொது வசனம்

பரமன் பார்வதி கொலுவாக வீற்றிருக்க பிருங்கிமுனிவர் கொலுவாக வருகிறவிதம் காண்க.



## பிருங்கி முனிவர் வருகிற கவி

ஹரியயன்தேடிக்காணு ஆண்டவன்பாதம்தன்னை
பிரியமாய்காணவேண்டி பெருந்தவமுனிவன்தானும்
கருத்ததோர்புலிமான்தோல் காஷாயயுடையுடுத்தி
ஒருமையாய்கைலைநாடி உத்தமன்வருகின்றாரே.

பிருங்கிமுனி தரு

பாதிமதியணிந்த — பரமன்பாதத்தைபோற்றும்
பிருங்கிமுனிவன்வந்தனர் — கொலுவைநாடி
பிருங்கிமுனிவர்வந்தனர்

ஆதிசிவனேயென்று — அனுதினம்மனதில்கோரி
சுருள் ஆனந்தமோன — வழிநிலையறிந்தவர்
ஞானநூல்களை — நன்றாய்தெரிந்தவர் — பா

தண்டுகமண்டலமும் — நீண்டசடைகுலுங்க
மண்டலந்தன்னிலுள்ள — தொண்டர்பலர்வணங்க
சுருள் மந்திரமோது — முனிவர்கள்சூழ
இந்திரதேவர்கள் — வந்துமேதாழ — பா

முப்புரிநூல்மெய்யில் — மெய்ப்படவேயிலங்க
கப்புங்கதிரவன்போல் — காதில்கவசந்துலங்க
சுருள் காவிகாம்பரம் — கலைமான்தோலை
தாவியேயிடையில் — தரித்துமேமேவ — பா

திரிபுரத்தையெரித்த பரமன் தன்னைகண்டு
பிரியமுடனே ஞானம் பேசிமகிழஇன்று

சருள் பரிவுள்ள ஆசிர்மம் பிரியமாய்விட்டு
நெறியுள்ள கைலை நடப்பேனேதொட்டு பா

பிருங்கிமுனி கவி

அருகினிலமர்ந்திருக்கும் அன்புள்ளசிஷமாரே
கருத்தினில்கொண்டேன் இன்று கைலைமாநகரம்சென்று
திருத்தமாய்பரமன் தன்னால் சேதிகளறியவேண்டும்
பெருமையாய்வீற்றிருப்பீர் பரமனைகண்டுவாறேன்.

வசனம்

ஆனால் கேளும் சிஷ்யர்களே! பரமனிடத்தில் சென்று சிவஞான மார்க்கங்களை பேசி அருள்பெற்று வருகிறேன் சிஷரே.

பிருங்கிமுனி தரு

ஆசிர்மம்தன்னை விட்டு ஆனந்தசந்தோஷமாக
மாசில்லாபரனைகாண மாமுனியும்தானடந்தார்

தாண்டிநடைநடந்து தவமுனிவர்கண்டுவாட
வேண்டியவரமளிக்கும் விமலனிடமேநாட

வெள்ளியங்கிரியைகண்டு உள்ளத்தில்மகிழ்கொண்டு
விந்தையுள்ளமுனிவன் வேகமாகவந்துசேர்ந்தான் ஆ

பிருங்கிமுனி விருத்தம்

ஹரியயன்தேடிகாணு அம்பலத்தரசேபோற்றி
கரிதனையுரித்தணிந்த கெங்காதரனேபோற்றி
நரிதனைபரியாய்செய்த நிற்ஜலபொருளேபோற்றி
திரிபுரந்தனையெரித்த தேவனேபோற்றிபோற்றி.

பரமன் தரு

வந்தடிபணிந்துநின்ற விந்தையுள்ளமாமுனி
எந்தனாளுங்கீர்த்தியாக வாழ்ந்திருப்பாய்தானினி

பிருங்கிமுனி தரு

ஆசிர்வதித்தஅய்யனே அமரர்போற்றும் துய்யனே
அன்பன்சந்தோஷங்கொண்டேன் அருள்தாரும்அய்யனே

பரமன் தரு

பிருங்கிரிஷிமாமுனி பிரியமாகத்தானினி
கருத்துடனேவந்தசே கழறுவாயேதானினி

பிருங்கிமுனி தரு

ஆலமுண்ட ஈசனே ஞாலம்புகழும்நேசனே
அன்பன்எனக்கருள்தர வேண்டும்நடராஜனே

பரமன் கவி

அருள்பெறவந்த அருந்தவமுனியேகேளாய்
பெருகியஞானங்கல்வி புவிதனில்கீர்த்தியோங்க
வரமதுதானுந்தந்தேன் வானவர்தான்மகிழ
சிறப்புள்ளகைலைதன்னில் சந்தோஷமாய்வீற்றிருப்பாய்.

வசனம்

ஆனல் கேளும் முனிவனே! ஆசீர்வதித்தேன் கைலாயத்தில் சந்தோஷமாய் வீற்றிரும் முனியே.

பார்வதி கவி

சுந்திரமூர்த்திக்காக தூதுமேசென்றநாதா
அந்தமுள்ளமுனிவன்தானும் அரனுமைதான்துதித்தான்
எந்தனைமதிக்கவில்லை என்னநான்குற்றம்செய்தேன்
குந்தகமில்லாமல் கோதைக்குரைத்திடீரே.

வசனம்

ஆனல் கேளும் பிராணபதியே! எந்தனை மதிக்காமல் முனிவன் உன்னை மாத்திரம் பணிந்த காரணம் தெரியச்சொல்லுவீர் நாதா.

பரமன் தரு

மங்கையேசொல்லுவேன்கேளடி என்பெண்ணேகண்ணே
மனதில்வருத்தம் வேண்டாமே
சங்கரன்எனைதுதித்தால் தையல்உனக்கென்ன
சந்தேகமொழிகளைசாற்றுவாய் எந்தன்முன்னே ம

பார்வதி தரு

தேவர்முனிவர்வந்தாலும் என்நாதாபோதா
சிந்தைகலங்கி நொந்தாலும்
ஆவலாய்இருவரையும் அன்புடன்துதிப்பாரே
தாவிவந்தமுனிவன் தையலைதுதிக்கவில்லையே தே

பரமன் தரு

பாக்கியத்தைகோரிவந்தாலே என்மானேதேனே
பாசமாய்இருவரை துதிப்பார்மேலாகவே
மோக்ஷத்தைகோரினதால் முனிவன்எனைதுதித்தான்
மங்கையேமுனிவன்மீது வருத்தம்வேண்டாம்கதித்தேன் பா

பார்வதி தரு

சத்திநான்யில்லாவிட்டாலே என்னண்ணல்வண்ணல்
வெற்றியுமக்கேது பின்னாலே
சத்தியிருந்தாலல்லோ முத்திபெறவழிவேண்டும்
சங்கதியறியாமல் சொல்லவந்தீரேஆண்டும் சத்

பரமன் கவி

பாவையேமுனிவன் தானும் பாக்கியம்கோரினவனல்ல
மேவியேமோக்ஷத்திற்கு முனிவனும்வந்ததாலே
ஆவலாயெந்தனிட அடியதைதான் துதித்தான்
கோபமோகொள்ளவேண்டாம் கோதேநீயமருவாயே.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! முனிவன் பாக்கியத்தைக்கோரினவனல்ல மோக்ஷத்தைக் கோரினபடியால் என்னை மாத்திரம் நமஸ்கரித்தான் பாக்கியம் வேண்டுமென்றால் உன்னையும் நமஸ்கரிப்பான் பெண்ணே.

பார்வதி கவி

பரமனேகெதியென்று பாதமேபணிந்துநின்ற
பிருங்கிமாமுனியேகேள்ாய் பூவைக்குச்சொந்தமான
சரீரந்தன்னிலுள்ள சத்தானமாங்கிஷத்தை
விரைவினில்தந்திடுவாய் விமலியும்யுரைத்திட்டேனே.

வசனம்

ஆனால் கேளும் முனிவனே! பரமனே கெதியென்று என்னை மறந்து துதித்தபடியால் எனக்கு சொந்தமாகிய உன்னிடம் இருக்கும் ரத்தமாங்கிஷத்தை தந்திடுவாய் முனிவனே.

பிருங்கிமுனி தரு

சங்கராஎன்னசெய்வேன் எனக்கு சதிமோசம்நேர்ந்ததையோ
மங்கைபாகாயுந்தன் மலரடிதுதித்ததால்
அங்கையர்கண்ணிக்கு அருங்கோபம்மிகுந்ததே ச

மோக்ஷவழியைதேடி உம்மால் காக்ஷிபெறவேநாடி
சாக்ஷ்க்ஷாதிகடவுளே சரணமென்றடைந்ததால்
சூக்ஷ்மமாய்சத்தியும் சினமதுகொண்டாளே ச

திரேகந்தன்னிலுள்ள ரத்த சரீரந்தன்னைமெள்ள
கரமதைபற்றியே கழித்தேன்மாங்கிஷத்தை
பரமக்கடவுளே பெலமெல்லாம்போச்சுதே ச

உள்ளம்மிகவாடுதே நடக்க தள்ளாடிமிகதள்ளுதே
வள்ளலேஎன்செய்வேன் வந்ததேபெருந்துன்பம்
கள்ளமில்லாமல் கடையேனைக்கண்பாரும் ச

பிருங்கிமுனி கவி

அத்தியையுரித்தணிந்த அண்ணலேஎன்னசெய்வேன்
சத்திக்குசொந்தமான சத்தானமாங்கிஷத்தை
சுத்தமாய்தானறுத்து சுந்திரன்தந்ததாலே
பற்றியேநடப்பதற்கு பெலமதுஇல்லைஐயோ

வசனம்

ஆனால் கேளும் சிவபெருமானே! பார்வதி தன்னிட மாங்கிஷத்தைக் கேட்டபடியால் தந்துவிட்டேன் எனக்கு எழுந்து நடக்கமுடியவில்லையே என்னசெய்வேன் தெய்வமே.

பரமன் கவி

தொண்டனேயஞ்சிடாதே துன்பத்தைநீக்குதற்கு
தெண்டதுதந்தேனிதோ தீரமாய்கைபிடித்து
வண்டனிகுழல்பார்வதி வஞ்சியும்மனதுவாட
கண்டுமேஆசிர்மங் களிப்புடன்சென்றுவாரும்.

வசனம்

ஆனால் கேளும் முனிவனே! நீ கஷ்டமடையாமல் இதோ தெண்டு தந்தேன் கைபிடித்து ஆசிர்மம் செல்லும் முனிவனே.

பார்வதி தரு

என்னுபுத்தியுமக்குநாதா நீரும்
இந்தவிதம்செய்தீர் வாதா.

என்னைமதிக்காத இந்தமுனிவனுக்கு
உன்னிததண்டத்தை உத்தமாதந்தீரே எ

பரமன் தரு

பக்தரைகார்க்காமல் விட்டாலேஎனக்கு
பெருமைஎதுபின்னல் கெட்டாலே
தக்கன்செல்வியாளே சிந்தையும்வாடாதே
மிக்ககோபங்கொண்டால் முனிவரும்நாடாரே ப

பார்வதி தரு

சத்தியென்றுயென்னை மதிக்காமல்தெண்டை
தந்தீரேமுனிக்கு துதிக்காமல்

ரத்தமாங்கிஷத்தை நீக்கியான்பெற்றேனே
சித்தமறியாமல் தந்தீரேபலந்தானே ச

பரமன் தரு

தெண்டனைகொடுத்தேன் என்றுமேபெண்ணே
சிந்தையும்வா டாதேநின்றுமே
மண்டலம்புகழ்பெற்ற மகாமுனியாச்சே
மரியாதைதவறியே மங்கைசெய்தாய்எச்சே

பார்வதி கவி

சத்தியென்பெருமைதன்னை சுவாமிநீர்தானறிந்தும்
உத்தமநாதாநீரும் உபேக்ஷைசெய்யலாமா
நத்தியேபெருமையது நாட்டினில்எனக்குளது
பத்தியுள்ளகைலைவிட்டு பாவையும்செல்லுவேனே.

பார்வதி சிந்து

பரமன்மேல்கோபங்கொண்டு பார்வதியும்
பிரியமாய்பூலோகம் செல்லவேஎண்ணி

அரனையேதான்மறந்து தேவர்கள்
அல்லும்பகல்துதிக்கும் கைலைவிட்டு

[illegible] வால்மீகர்
விந்தையுள்ளவனத்தில் சுந்தரியாளும்

சோகமாய்தானும்வந்து வனமதில்
தழைத்தவில்வ மரத்தடியில்

கன்னியாள்தானும்தங்கி அங்கே
கடினமாய்செடிகொடிகள் தழைத்திடவேயோங்கி

உன்னிதவனமதிலே வேடிக்கை
கன்னியாளும்பார்த்து தங்கிஇருந்தாள் தந்தினம்.

பார்வதி விருத்தம்

சங்கரன்மேல்கோபங்கொண்டு சத்தியும்கைலைவிட்டு
பொங்கமாய்வால்மீகர் புனிதநல்வனத்தில்வந்து
தங்கியேவில்வம் தழைத்திடும்மரத்தடியில்
அங்கையற்கண்ணிமாது அன்புடன்இருந்திட்டாளே.

வசனம்

பார்வதி பரமன்மீது கோபங்கொண்டு வால்மீகர்வனத்தில் வந்து தங்கியிருக்க வால்மீகர் கொலுவாக வருகிறவிதங் காண்க.



## வால்மீகர் வருகிற கவி

ஆலத்தையள்ளியுண்ட அரனடிமறவாதிரன்
சீலமாய்தானெழுந்து சடைமுடியலங்கரித்து
கோலமாய்தண்டு கமண்டலங்கரம்பிடித்து
சாலவேவால்மீகர் சபைநாடிவருகின்றாரே.

வால்மீகர் தரு

வால்மீகமகாமுனிவாவநதா மகாஜூ.......,
வால்மீகமகாமுனிவர்வாரார்

பால்போன்றவெண்ணீறை பாக்கமெய்யினில்பூசி
சுருள் பத்தியாய்பரமனை சித்தத்திலறிந்தவர்
முத்திக்குநல்வழி மெத்தவிதிப்பவர் வா

காவிகாம்பரமிடையில்தரித்து யொளிமிகுந்த
கமண்டலத்தைகாத்தில்பிடித்து

தாவிநடைநடந்து தவமுனிவர்கண்டுவாட
சுருள் சத்தியநெறியுள்ள உத்தமநாதன்
மெத்தவேயுலகில் சித்தனைப்போதன் வா

நீண்டசடைமுடிகளாட வேடிக்கையாக
நத்தியேசிஷர்கள்கூட

ஆண்டவனேயென்று அரனைமனதில்கோரி
சுருள் ஆனந்தமான வழிநிலையறிந்தவர்
கானிலுள்ள முனிவரில்சிறந்தவர் வா

அங்கயற்கண்ணிமாது பரமன்மீது
பொங்கிமங்குவாடிசாது

தங்கியேவனத்தில் தையல்இருப்பதாலே
சந்தோஷமாக தவமுனிகண்டு
சுந்தரிமகிழ பேசவேவிண்டு வா

வால்மீகர் கவி

என்னிடசிஷியமாரே இன்றையநாளில்தானும்
பன்னியேவனத்தைநாடி பலவிதபுஷ்பங்கொய்து
கன்றுமான்கரம்பிடித்த கடவுளைபூசைசெய்ய
அன்புடன்மலரைகொய்ய அனைவரும்வருகுவீரே.

வால்மீகர் தரு

ஆகாஇதென்னபுதுமையோ இந்த
அடர்வனம்செழித்து தழைத்ததேவண்ணமாய்
ஒஹோபனிரெண்டாண்டாய் மழைமாரியில்லாமல்
உலர்ந்தமரஞ்செடிகள் தழைத்தவிதமறியேன் ஆ

மல்லிகைமுல்லைரோஜாவும் நல்ல
மணமுள்ளசாமந்தி வாசனைவீசுதே
முல்லைபாரிஜாத யுன்னிதம்என்னசொல்வேன்
மூவர்தேவராலும் வாயால்சொல்லப்போகுமோ ஆ

தேவர்கள்வந்து தங்கியேஇங்கு
தவமதுசெய்ய சிஷ்டிப்புசெய்தாரோ
மூவர்தேவரானாலும் முனிவனும்கண்டு
சேவடிதுதிசெய்ய செல்லுவேனேநன்று ஆ

வால்மீகர் தரு

அன்னையேயுன்பாதம்போற்றினேன் எனையாளும்தயாபரி
அன்னையேயுன்பாதம்
அன்னையேயுந்தன் பொன்னடிகமலத்திற்கு
சுருள் அருந்தவமுனிவனும் போற்றினேன்தாயே
வருத்தத்தைநீக்க வாழ்த்துவாய்நீயே

பார்வதி தரு

பாதம்பணிந்தமுனியே சுகமாகநீவாழ்குவாய்
பாதம்பணிந்தமுனியே
பூதலத்தில்புகழ்பெற்ற புண்ணியமாமுனியே
சுருள் பூதலத்தில்சுக மாகவாழ்குவாய்
பூரித்தேன்நீயும் மனமதுமகிழுவாய்

### வால்மீகர் தரு

தாயேநீவந்ததேதம்மா இவ்வனமதைநாடியே
தாயேநீவந்ததேதம்மா

ஆயன்சகோதரியே ஆபத்துவந்ததென்ன
சுருள் அன்னையேவிசனங் கொள்ளாதேநீரும்
துன்பத்தைநீக்குவேன் வந்ததைகூறும் தா

### பார்வதி தரு

துன்பம்வந்ததைக்கூறுவேன் முனிநாதாகேளும்
துன்பம்வந்ததைக்கூறுவேன்

இன்பமாய்பரமனோடு இருக்கின்றவேளைதன்னில்
சுருள் எந்தனைமதிக்காமல் பிருங்கிமாமுனியும்
சொந்தமாய்பரமனை துதித்தானேகனியும்

### வால்மீகர் கவி

வருத்தமுங்கொள்ளவேண்டாம் வானவர்துதிக்கும்தாயே
பெருந்தவமுனிவனான பிருங்கிமாமுனிவன்தானும்
பரமனைதுதித்ததாலே பழுதது நேர்ந்ததென்னா
கருத்ததைஇன்னதென்று கருதுவாய்தாயேநீரும்.

### வசனம்

ஆனால் கேளும் தாயே! பிருங்கிமுனிவன் பரமனைகோரினதினால் பழுது நேர்ந்ததை சொல்லவேண்டும் தாயே.

### பார்வதி தரு

சங்கரனோடுமாது தங்கியேஇருக்கும்போது
பொங்கமாய்முனிவன்தானும் பூவையைமதித்திடாமல்
சங்கரன்சதமேயென்று சரணமென்றடைந்ததாலே
மங்கையும்கோபங்கொண்டு வனமதில்வந்தேனையா.

### வசனம்

ஆனால் கேளும் வால்மீகமுனியே! பரமனோடு நான் கைலையில் வீற்றிருக்கையில் பிருங்கி முனிவன் பரமனைமாத்திரம் பணிந்தான் என் திருவடியை வணங்கவில்லை என்ன காரணமென்று நாதனை கேட்டதற்கு பரமன், முனிவன் பாக்கியத்தைக் கோரினவனானால் உன்னை துதிப்பான் மோக்ஷத்தை கோரினபடியால் என்னை துதிசெய்தான் என்றுசொல்ல நான் கோபங்கொண்டு எனக்கு சொந்தமாகிய முனிவனிடத்துள்ள இரத்தமாங்கிஷத்தை வாங்கிக்கொண்டேன் அதற்கு பரமன் முனிவனுக்குத் தெண்டை கொடுத்தார், அதனால் கோபங்கொண்டு பரமனை பிரிந்து பூலோகம் வந்துவிட்டேன் முனிநாதா.

வால்மீகர் தரு

அன்னையேவிசனம்வேண்டாம் எந்தனிடஆசிர்மம்
வாரும் அம்மா நீரும்
பன்னியேவனப்பெண்களோடு பாசமாய்வீற்றிருப்பாய்
தாயே நீரும் தாயே

பார்வதி தரு

சிங்கம்புலிக்கரடி தங்கும்வனத்தைவிட்டு
மாது மிக சாது
மங்களவார்த்தைபேசி நங்கையாளும்வந்தேன்
முனியே அன்ப முனியே

வால்மீகர் தரு

சத்துசித்தானந்த சர்வலோகம்நிறைந்தசொரூப
அம்மா நீரும் அம்மா
சுத்தமானயாசிர்மத்தில் சுந்தரியேவீற்றிருப்பாய்
தாயே அம்மா தாயே

பார்வதி தரு

இந்தயுலகமதில் எவருமறியாத நூதன
விரதம் அய்யா விரதம்
சுந்தரிக்குத்தானுரைத்தால் அந்தவிதிப்படியே
கொள்வேன் விரதம் கொள்வேன்

வால்மீகர் தரு

அன்னையேவிரதமொன்று இன்னிலத்தோர்அறியாத
விரதம் உண்டு விரதம்
கன்றுமான்கரமேந்தும் கேதாரீசன்நோன்பு
விரதம் பெயர் விரதம்

பார்வதி கவி

அந்தவோர்விரதமதை அருந்தவமுனியேநீயும்
சிந்தையும்மகிழ்ச்சியாக சொல்லுவீர்விவரமாக
விந்தையாய்விரதமதை மெல்லியாள்தானிருந்து
குந்தகமில்லாமல் கோதையும்முடிக்கின்றேனே.

வசனம்

ஆனால் கேளும் முனிவரே! கேதாரீசஸ்வரி நோன்பு எவ்விதம் இருப்பது சொல்லவேண்டும் முனிநாதனே.

### வால்மீகர் அகவல்

பார்வதிதாயே பகருவேன்கேளும்
புரட்டாசிமாதம் சுக்கிலபக்ஷம்
தசமிதுடங்கி ஐப்பசிதிங்கள்
கிருஷ்ணபக்ஷம் தீபாவளியே
அமாவாசை அன்றையவரைக்கும்
இருபத்தொருநாள் பிரதமிதினமே
ஸ்நானம்செய்து சம்ப்ரமுடனே
சுத்தவஸ்திரம் தரித்துமேகொண்டு
ஆலவிருக்ஷ அடியில்மண்ணால்
அரனிடலிங்கம் பிடித்துமேவைத்து
அரனையேகோரி அபிஷேகஞ்செய்து
அரும்புமலரும் அருகும்சாத்தி
திருநீர்விபூதி தீபநைவேத்தியம்செய்து
வெல்லயுண்டை சந்தனயுண்டை
சீர்பெரும்மஞ்சள் அதிரசம்ஒன்று
சிவந்தகதலி பழமதுயொன்று
தேங்காய்பாக்கு வெத்திலையுடனே
தீபங்கொடுத்து நமஸ்காரம்செய்து
நூலதைகொண்டு முடியதைபோட்டு
நோன்புவரைக்கும் தினம்ஒருமுடியே
இருபத்தொருநாள் எண்ணிமுடிந்து
இருபத்தோரிழை யானதும்முரிக்கி
இந்தப்படியே விரதமேசெய்தால்
இருபத்தோராநாள் தீபாவளியே
அமாவாசை யன்றைக்குபரமன்
அருளதுகொடுப்பார் அன்னையேநீரும்
சொன்னப்படியே விரதங்கொண்டு
சுந்தரிமுடிப்பாய் இனிமேல்கண்டு

பார்

### பார்வதி கவி

சொன்னதோர்வாக்குபோல சுந்திரமுனியேகேளீர்
பன்னியேபுரட்டாசி பரிவுள்ளசுக்கிலபக்ஷம்
இன்றுமேவந்ததாலே இதுநாள்முதல்விரதம்
கன்னியாளும்செய்வேன் கர்த்தனைகோரிதானே.

### வசனம்

ஆனால் கேளும் வால்மீகமுனிவரே! நீர்சொன்ன வண்ணம் இன்றையதினம் புரட்டாசிமாசம் சுக்கிலபக்ஷம் தசமிதிதி வந்தபடியால் நோன்புக்குரிய சாமான்களை தருவீர் முனியே.

வால்மீகர் கவி

அப்படியானுல்சரி அன்புடன்விரதம்கொள்ள
ஒப்புமேகொண்டதாலே உந்தனுக்குவேண்டும்
தப்பியேசாமான்தன்னை கணக்குடன்தந்தேனிதோ
தப்பிதமில்லாமல் தையலேவிரதம்செய்வாய்.

வசனம்

ஆனுல் கேளுமம்மா தாயே! நோன்பு விரதத்திற்கு வேண்டி பண்டங்களை சேகரம்செய்து தந்தேன் விரதம் கொள்ளும் தாயே.

பார்வதி தேவாரம்

கன்றுமான்பிடித்தாய்போற்றி கற்றைவார்சடையாய்போற்றி
மன்றுநில்நடித்தாய்போற்றி மதனனையெரித்தாய்போற்றி
பன்றிக்குபால்கொடுத்தாய்போற்றி புரமதையெரித்தாய்போற்றி
இன்றெனைகார்ப்பாய்போற்றி ஏகாம்பராபோற்றிபோற்றி.

பரமன் தரு

வந்தேன்வந்தேன்பார்வதியே வருத்தம்வேண்டாம்பார்வதியே
சிந்தைகளிப்பாய்பார்வதியே செகத்தோர்போற்றும்பார்வதியே
உந்தன் விரதம்தனைமகிழ்ந்தேன் உம்பர்முனிவர்மனம்மகிழ
கந்தனைஈன்றபார்வதியே கவலைநீக்குவேன்பார்வதியே
வேண்டும்வரந்தன்னையே விமலியாளேபன்னுவாய்
தாண்டவனும்தருகுவேன் தையல்இன்பம்பெருகுவாய் வந்

பார்வதி விருத்தம்

அம்புலிகொன்றைதும்பை அணிந்திட்டபரனேபோற்றி
தெம்புடன்பிரமனரி தேடியடிகாணுய்போற்றி
உம்மிடசரீரத்தில் உத்தமிஎந்தனுக்குமிக்க
நம்பினேன்அர்த்தசரீரம் நாதனேதருகுவீரே.

வசனம்

ஆனுல் கேளும் நாதா! நான் வால்மீகர் சொன்ன விரதத்தின்படி புரட்டாசி மாதம் சுக்கிலபக்ஷம் தசமிதுடங்கி ஐப்பசிமாதம் கிருஷ்ணபக்ஷம் தீபாவளி அமாவாசை இருபத்தொருநாள் விரதம் இருந்தபடியால் என் நோன்பு விரதத்திற்கு மகிழ்ந்து என்னவரம் வேண்டுமென்றபடியால் உந்தன் சரீரத்தில் அர்த்தசரீரம் வேண்டும் நாதா.

பரமன் கவி

பெண்ணேயுன்யிஷ்டப்படி பேதகமில்லாமல்தானே
வண்ணமாய்அர்த்தசரீரம் வஞ்சியேயுனக்குதந்தேன்

உண்மையாய்இவ்விரதம்தன்னை உலகத்திலுள்ளமாந்தர்
திண்ணமாய்செய்வாராகில் ஜெகதீசன் தருவேன்காக்ஷி.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே! நீ செய்த கேதாரி ஈஸ்வரர் நோன்பு விரதத்திற்கு மகிழ்ந்து உனக்கு நீ கேட்டபடி என் சரீரத்தில் அர்த்த சரீரம் தந்தேன் இந்த நோன்பு விரதத்தை உலகத்தில் இருக்கும் மாந்தர்களில் யார் விரதம்கொண்டாலும் சரி அவர்களுக்குப் பாக்கியமும் முத்தியும் தருகுவேன் நாம் கைலாயம் செல்லுவோம் வாரும் பெண்ணே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் பரமன் பார்வதிக்கு இடபாகம் தந்து கைலைசென்றபிறகு இவ்விரதத்தை அனேகர் அனுஷ்டித்து மேலான பதவி யடைந்தபடியால் தெய்வலோககன்னியர் இவ்விதம் அனுஷ்டிக்க பூலோகம் நாடிவருகிற விதம்காண்க.



## தெய்வகன்னிகள் வருகிற கவி

தெய்வலோகமாதர்சிவ பெருமான்விரதம்
செய்யவேபூலோகம்நாடி சேயிழைமார்கள்கூடி
துய்யவேசடைமுடித்து திலகமுமையும்தீட்டி
வெய்யவனுதையம்போல மாதர்கள்வருகின்றாரே.

தெய்வகன்னிகள் தரு

வந்தாள்தெய்வகன்னியென்னும்மாது அதிலையிலாய்
வாராள்தெய்வகன்னியென்னும்மாது

கந்தமலர்கள்சூடி கஸ்தூரிவாடைவீச
சுருள் காதலாய்கெங்கை நதிக்கரைசென்று
கேதாரிவிரதம் கொள்ளவேயின்று வ

சிறுத்தஇடைசரிகை மின்னல்தகதகென்று
கருத்தவளையல்காந்திதுன்ன

திருமுகமதில் திலர்தபொட்டுஇலங்க
சுருள் சித்திரம்போலவே பத்தினிமாது
உத்தமிகூடியே மெத்தவேசாது வ

அன்னநடையைபோன்ற மங்கைஇளஞ்சந்திரன்
அழகைபோன்றமிகநங்கை

மின்னும்பணியாரங்கள் மாலைமிகசொலிக்க
சுருள் மாங்குயிலெனும் ஓங்கிடுந்தொனியாள்
தங்கும்மறைகளை பேசியேஇனியாள் வ

கொண்டைபூச்செண்டுஅசைந்தாட மாரனவன்
கண்டுமயங்கிநின்றுவாட

தண்டைகொலுசுகாலில் சலங்கைகலகலென்ன
சுருள் தாவியேதெய்வ லோகமேவிட்டு
பாவையும்பூலோகம் செல்லுவேன்தொட்டு வ

முதல்கன்னி விருத்தம்

சொல்லுவேன்கேளுமம்மா சேயிழைநாமும்கூடி
நல்லதோர்கெங்கை நதியில்நாம்ஸ்நானம்செய்து
தொல்வினைதனையகற்றும் தூயகேதாரிவிரதம்
செல்வியும்தான்முடித்து சீக்கிரம்வருகுவோமே.

வசனம்

ஆனல் கேளுங்களடி கன்னிகளா! கேதாரீஸ்வரர் நோன்பு விரதம் நூற்கவேண்டும் கெங்கைநதி சென்று விரதம் அனுஷ்டிப்போம் வாரும் கன்னிகளா.

இரண்டாவது கன்னி தரு

தெய்வலோகந்தன்னைவிட்டு கேளுமம்மணி நாம்
செல்லுவோம்பூலோகம் வாருமம்மணி

முதல் கன்னி தரு

வாருமென்றுதானுரைத்த வஞ்சியேகேளும் இப்போ
வானுலோகம்தன்னைவிட்டு வந்தோமேநாமும்

இரண்டாவது கன்னி தரு

விந்தையுள்ளமாதாசே கேளுமம்மணி நல்ல
வினைகளைநீக்குநதி எங்கேயம்மணி

முதல் கன்னி தரு

கூறுமென்றுதானுரைத்த மங்கையேவாரும் இந்த
கெங்கைநதியோடுகிற சிங்காரம்பாரும்

இரண்டாவது கன்னி கவி

தங்கையேகேளாய்நாமும் தெய்வலோகம்விட்டு
கெங்கைநதிக்கரை கன்னியாள்வந்துசேர்ந்தோம்
திங்களைசடைதரித்த சிவபெருமான்விரதம்
மங்கையும்செய்யவேண்டி மாதுமேஸ்நானம்செய்வோம்.

வசனம்

ஆனால் கேளும் கன்னிகளா! நாம் பூலோகத்தில் வந்து கெங்கை நதி சேர்ந்தபடியால் கேதாரிவிரதம் அனுஷ்டிக்க கெங்கையில் ஸ்நானம் செய்வோம் கன்னிகளா.

முதல் கன்னி தரு

கன்னியரேகெங்கை நதிதனில்இறங்கியே
கவலைதீரஸ்நானம் செய்வோம்ஓங்கியே

இரண்டாவது கன்னி தரு

இந்தகெங்கைநதியைபோல யுலகில்காணேனே
ஏந்திழையும்ஸ்நானம்செய்ய எண்ணம்கொண்டேனே

முதல் கன்னி தரு

அணிந்தயாடைதனைகழற்றி அரிவைவைப்பீரே
ஆனந்தமாய்ஜலம் முழுகிஇன்பம்பெருவாயே

இரண்டாவது கன்னி தரு

சொன்னபடிமாதரசே தோகையாளுமே
துறையில்வந்து ஸ்நானம்செய்தேன்பாருமே

முதல் கன்னி தரு

மங்கையரேநதியில்தீர்த்தம் மாதுயாடினோம்
மாதரசேவிரதமதை :செய்வோம்வாருமே

இரண்டாவது கன்னி தரு

நங்கையரேபொற்குடத்தில்' ஜலத்தைமொள்ளுவாய்
நதிக்கரைதன்னைவிட்டு கரையேறுவாய்

முதல் கன்னி கவி

அன்புள்ளகன்னிமாரே ஐப்பசிஅமரபக்ஷம்
இன்றுமேசதுர்தசி என்னுந்திதிவந்ததாலே
கன்னியும்விரதமதை கருத்துடன்செய்யவேண்டும்
என்னிடமொழியைப்போல ஏந்திழைவருகுவீரே.

வசனம்

ஆனல் கேளும் கன்னிமார்களே! ஐப்பசிமாதம் அமரபக்ஷம் சதுர்த்தசிதிதி வந்தபடியால் விரதம் இருப்போம் வாரும் கன்னிமார்களே.

இரண்டாவது கன்னி கவி

ஆலத்தையுண்டாஈசன் அருளதுபெறவேநாடி
சீலமாய்மண்ணையள்ளி சிவலிங்கம்தான்பிடித்து
சாலவேபக்ஷணம் சந்தனயுண்டையோடு
கோலமாய்மலரைச்சாற்றி கன்னியும்பூசைசெய்வோம்.

வசனம்

ஆனல் கேளுமம்மா கன்னிகளா! கெங்கையோரத்தில் ஆலவிருக்ஷத்தின்கீழே மண்ணையள்ளி சிவலிங்கம் பிடித்துவைத்து இருபத்தொருதரம் பூசைசெய்து இருபத்தொரு பழம் இருபத்தொரு அதிரசம் இருபத்தொரு வெல்லயுண்டை இருபத்தொரு சந்தனயுண்டை இருபத்தொரு மஞ்சளுண்டை இருபத்தொரு இழையிலேகயறு அதிலே இருபத்தொரு முடிமுடிந்து நல்ல மல்லிகைபுஷ்பம் இருபத்தொருபாக்கு இருபத்தொரு வெற்றிலே இவைகளை வைத்து பூசை செய்து கொண்டிருப்போம் கன்னிமார்களா.

பொது வசனம்

அகோதெப்படியென்றல் தெய்வகன்னியர்கள் கேதாரி நோன்பு விரதம் கெங்கைகரை ஆலவிருக்ஷத்தின்கீழே செய்துகொண்டிருக்க அந்நகரில் வாசமாகிய புண்ணியவதி பாக்கியவதி வருகிறவிதம் காண்க.



புண்ணியவதி வருகிற கவி

குங்குமகளபம்பூசி கோதியேமயிர்முடித்து
பங்கையவதனந்தன்ன பலவிதமலர்கள்சூடி

கங்கையைசிரமணிந்த கடவுளைதொழுதுபோற்றி
மங்கைபுண்ணியவதி மாதிதோவருகின்றளே.

புண்ணியவதி தரு

பிஞ்சுமதியணிந்த பரமன்பாதத்தைப்போற்றி
புண்ணியவதியும்வந்தாள் கொலுவைநாடி
புண்ணியவதியும்வந்தாள்

கஞ்சமலர்கள்சூடி கன்னிமாருடன்கூடி
சுருள் கங்கணவளையல் கலகலவென்ன
பங்கையவதன கன்னியாளென்ன

சேலைசரிகைமின்ன சித்திடையொட்டியாணந்துன்ன
வாலைவயதுள்ள வஞ்சியிவளோவென்ன
சுருள் வாசனைபரிமள வாடைகள்வீச
பாசமாய்யாவரும் நேசமாய்பேச

அன்னநடைநடந்து சின்னஇடைதுவள
கன்னல்மதனைபழித்த கனிவாய்இதழ்பவள
சுருள் காதினில்ரத்தின கம்மல்இலங்கிட
கனகசரப்பளி மார்பில்துலங்கிட

காலிலணிந்ததண்டை கலகலகலவென்ன
மேலும்பணிகளாரம் பளபளபளவென்ன
சுருள் வில்லதைமாற்றிடும் மெல்லியின்புருவம்
மெல்லிரதியென மங்கையென்னுருவம்

புண்ணியவதி விருத்தம்

அருமையென்பாங்கிமாரே அன்புடனுரைப்பேன்கேளீர்
திருமணக்குள்ளவேலை செய்துமேமுடிக்கவேண்டி
கருதினேன்கெங்கைக்கு கன்னியும்ஜலம்திரட்ட
பெருமைதங்கையானபாக்கிய வதியையழைப்பீர்தானே.

வசனம்

ஆனல் கேளும் தோழிமார்களா திருமணவேலைசெய்து முடித்து ஜலம் திரட்டவேண்டும் என் தங்கையான பாக்கியவதியை சீக்கிரம் அழைத்து வருவீர்கள்.



## பாக்கியவதி வருகிற விருத்தம்

அன்புள்ள தமக்கையவள் அழைத்ததோர்சேதிதன்னை
கன்னியர்தானுரைக்க காரிழைகாதில்கேட்டு
உன்னிதபணிகள்பூண்டு உயர்ந்ததோர்பட்டுடுத்தி
பன்னியேசேடிசூழ பாக்கியவதிவருகின்றாளே.

### பாக்கியவதி வருகிற தரு

பாதிமதியணிந்த பரமன்பாதத்தைபோற்றி
பாக்கியவதியாள்என்னும் பாவையும்வாறாள்

காதினில்பிரகாசமாய் கம்மல்மிகசொலிக்க
கன்னியர்புடைசூழ கோதையும்வாறாள்

சேலைசரிகைமின்ன சிற்றிடையொட்டியாணந்துன்ன
வாலைவயதுடைய வஞ்சியும்வாறாள்

அன்னநடைநடந்து சின்னஇடைதுவள
மின்னும்பணிசொலிக்க மங்கையும்வாறாள்

வண்மையுள்ளசெம்மங்குப்பம் வாழுஞ்சிறுபாலனை
சண்முகம்செந்தமிழ்பாடி தையலும்வாறாள்

### பாக்கியவதி கவி

அன்புள்ள தமக்கையாளே அறிவையாளுந்தன்பாதம்
கன்னியாள்போற்றிசெய்தேன் கார்த்துமேரக்ஷிப்பாயே.

### புண்ணியவதி கவி

என்னடிபணிந்துநின்ற என்னிடதங்கையாளே
இன்னிலந்தனில்சுகமாய் ஏந்திழைவாழ்ந்திருப்பாய்.

வசனம்

ஆனல் கேளும் தங்கையே! சுகமாக வாழ்குவாய் எழுந்திரும் தங்கையே.

பாக்கியவதி தரு

என்னையழைத்தவிதம் என்ன இப்போ
ஏந்திழைக்குரைப்பாயே நன்ன

அன்புடன் இன்றுமே அழைத்தசேதிதன்னை
அருமையுள்ள தமக்கையே அறிவிப்பாயேமுன்னே எ

புண்ணியவதி தரு

உந்தனையழைத்தவிதம் தங்கையே அடி
உரைத்திடுவேன்கேளாய் நங்கையே

அந்தமுள்ளமனையில் சொந்தவேலைமுடித்து
சந்தோஷமாய்நதிக்கு செல்லுவோமேயடுத்து உ

பாக்கியவதி தரு

திருமனைக்குள்ளவேலை முடித்தேன் நல்ல
தங்கக்குடம்கரத்தில் எடுத்தேன்

வருகுவாய்எந்தனேடு வண்மையுடனேகூடி
பெருகியகெங்கைக்கு பூவைசெல்லுவோம்நாடி தி

புண்ணியவதி தரு

அரசர்கள்வீதிதன்னை விட்டோம் மாது
அந்தணர்வீதிதன்னை தொட்டோம்

வரிசையுடனேதோனும் வாழைபூஞ்சோலைதாண்டி
வஞ்சியாள்கெங்கைநதி விரைவில்வந்தோம்வேண்டி அ

பாக்கியவதி கவி

அந்தமதில்மிகுந்த அருமைஎன்தமக்கையாளே
விந்தையுள்ளமனை விட்டுமேவீதிதாண்டி
இந்ததோர்கெங்கைநதி ஏகிநாம்வந்ததாலே
சிந்தையும்மகிழ்ஷியாக ஜலமதுதிரட்டிசெல்வோம்.

வசனம்

ஆனல் கேளும் என் அருமை தமக்கையே! கெங்கைநதியில் சலம் திரட்டி சீக்கிரம் இல்லம் சேருவோம் வருகுவீர்.



## தெய்வகன்னி பூசைசெய்வது தரு

பூசைசெய்வோமே அரணைகோரி
பூவைபணிவோமே

காசிவிஸ்வநாதா கன்னிமீனாக்ஷிபாதா
பாசமதைநீக்கி பூசைசெய்தோம்நீதா பூ

மல்லிங்கைரோஜா மணமுள்ளமலர்களைசாற்றி
நல்லசந்தனையுண்டை வெல்லம்மஞ்சளுண்டை பூ

சொல்லும்கதலிபழம் எல்லாம்முன்னேவைத்து
ஆலத்தையுண்டவரே தில்லைகாளியைவென்றவரே பூ

சீலமாய்கெங்கையை சிரமதில்கொண்டவா
சீரியஅரவம் தன்னையேபூண்டவா பூ

### புண்ணியவதி விருத்தம்

இதுயென்னபுதுமையாக இன்றையநாளில்தானும்
நதிக்கரையோரந்தன்னில் நங்கையர்தானுங்கூடி
புதுமையாய்லிங்கம்வைத்து பூசையும்புரிகிறார்கள்
அதுசேதிஇன்னதென்று அறிகுவோம்தங்கைவாராய்.

### வசனம்

ஆனால் கேளும் தங்கையே! இதோ யாரோ இரண்டு கன்னியர்கள் லிங்கம்பிடித்து பூசைபுரிகிறார் பார்ப்போம் வாரும் தங்கையே.

### பாக்கியவதி தரு

எந்தவூருஎந்ததேசம் விந்தையுள்ளஅம்மணி
அந்தமுள்ளநதிக்கரையில் அரிவையாளும்தங்கிநீ
விந்தையுடன்பூசைசெய்து மெல்லியாளும்செய்குறீர்
அந்தவிதம்இன்னதென்று அரிவையற்குய்குவீர்

முதல் கன்னி தரு

தேவலோகந்தன்னில்வாழும் தெய்வகன்னிமாதுமே
தாவியேபூலோகந்தன்னில் தங்கிருந்துசாதுமே
பாவையாளும்விரதமொன்று பாசமுடன் இன்றுமே
பத்தியுடன்செய்கிறோம் பரமன் துணையென்றுமே தே

புண்ணியவதி தரு

அத்தியையுரித்தணிந்த கர்த்தன் தன்னைகோரியே
பத்தியுடனேவிரதம் பாசமுடன்நாரியே
இத்தரையோர்தானறிய எந்தனுக்குபாசமாய்
எந்திழையேசொல்லவேண்டும் இன்பமுடன்நேசமாய் அத்

இரண்டாவது கன்னி தரு

ஆதியிலேயுமையவளும் அரிதானநோன்பெடுத்துமே
அரனிடஇடபாகம் பெற்றனளேஅடுத்துமே
பூதலத்தில்இவ்விரதம் பூவையர்கள்செய்தாலே
பொருள்மிகுந்தசெல்வம்பெற்று வாழ்குவாரேபின்னாலே ஆதி

பாக்கியவதி விருத்தம்

அப்படியானல்சரி அன்புள்ளமாதேகேளாய்
இப்பாரில்இவ்விரதம் இன்பமாய்கொள்ளவேண்டி
தப்பாமல்அதற்குவேண தகுந்தசாமான்களோடு
துப்புடன் தானுஞ்செய்ய தோகைக்குசொல்லுவீரே.

வசனம்

ஆனல் கேளும் கன்னிமார்களே! கேதாரிநோன்பு நூற்கிறவிதமும் அதற்குள்ள சாமான்களும் சொல்லும் கன்னியே.

முதல் கன்னி விருத்தம்

புரட்டாசிமாதம் சுக்கிலபக்ஷம்
பூவையேதசமி துடங்கிநாளும்
அரைகுவேன்ஐப்பசி திங்கள்கிருஷ்ணபக்ஷம்
அமாவாசைவரைக்கும் இருபத்தொருநாள்
பிரதமைதினம் ஸ்நானம்செய்துமிக்க
பரிவுள்ளவஸ்திரம் தரித்துக்கொண்டு
உரியவேஆலின்கீழ் லிங்கம்வைத்து
ஒருமையாய்பூசை புரிவாய்மாதே.

வசனம்

ஆனல் கேளும் ராஜகுமாரத்தியே! நோன்புவிரதம் எடுக்கவேண்டியவிதம் எப்படி என்றால் புரட்டாசிமாதம் சுக்கிலபக்ஷம் தசமிதுட

ங்கி ஐப்பசிமாதம் கிருஷ்ணபக்ஷம் தீபாவளி அமாவாசைவரைக்கும் இருபத்தொருநாள் பிரதிதினம் ஸ்நானம் செய்து வஸ்திரம் தரித்துக் கொண்டு ஆலவிருக்ஷத்தின் அடியில் மணலால் இலிங்கம் பிடித்து வைத்து அபிஷேகஞ் செய்து மலர்கள் சாற்றி தூபதீபங் கொடுத்து ஒரு வெல்லவுருண்டை ஒரு சந்தனவுருண்டை ஒருமஞ்சளுருண்டை ஒரு அதிரசம் ஒரு வாழைப்பழம் ஒரு தேங்காய் ஒரு வெற்றிலை ஒரு பாக்கு இவைகளை நேமகமாக வைத்து ஒரு கயிற்றை இருபத்தொரு இழையிலே முறுக்கி அதைத் தினந்தினம் ஒருமுடியாக முடிந்து தினந்தினம் உபவாசமாக இருந்து நைவேத்தியம் செய்து அதிரசத்தையும் புசித்து இந்தப்படிக்கு இருபத்தொருநாள் கிரமமாக செய்து வரவேண்டும். அப்படி செய்பவர்கள் சகல பாக்கியமும் பெறுவார்கள். அப்படி இருபத்தொரு நாள் செய்ய நம்மால்முடியாது அதனல் சதுர்தசியில் ஸ்நானம்செய்து ஆலின்கீழே மணலால் இலிங்கம் பிடித்து வைத்து அபிஷேகம் செய்து இருபத்தொரு பழம் இருபத்தொரு அதிரசம் இருபத்தொரு வெல்லவுண்டை இருபத்தொரு பாக்கு இருபத்தொரு வெற்றிலை இருபத்தொரு இழையிலே கயறு அதிலே இருபத்தொருமுடி முடிந்து வைத்து நைவேத்தியம் கொடுத்து அர்ச்சனை செய்துவந்தால் அவர்களுக்கு வேண்டிய பாக்கியம் கொடுப்பார் கடவுள் ராஜகன்னிகளே.

புண்ணியவதி தரு

இந்தவிரதமதை அந்தமுடன்நாங்களும்
செய்ய அம்மா உய்ய
விந்தையுடன் திருமணம் மெல்வியர்க்காகவே
இல்லையே அம்மா இல்லையே

இரண்டாவது கன்னி தரு

விரதமதைசொன்னீரானல் மெல்லியரேயுங்களுக்கு
திருமணம் அம்மா பெரும்மணம்
அரனிடகிருபையாலே ஆகுமேஇவ்வருஷம்
தானே மிக தானே

பாக்கியவதி தரு

நல்லகுணமெல்லியரே நாங்களும்யுங்களோடு
கூடி அம்மா நாடி
தொல்புவியோர்மெச்ச நல்லநோன்புவிரதம்
நூற்போம் அம்மா நூற்போம்

முதல் கன்னி தரு

கன்னிமாரேஸ்நானம்செய்து பின்னமில்லாமலே
வாரும் அம்மா நீரும்
சென்னியில்பிறைதரித்த சிவனைகோரிவிரதம்
கொள்வோம் அம்மா கொள்வோம்

புண்ணியவதி விருத்தம்

கன்னியேயுங்களிட கருத்தைப்போல்நோன்புநூற்க
கன்னியும்ஸ்நானபானம் காரிஷைசெய்துவந்தோம்
அன்புடன்நோன்பை அரிவையர்தான்முடிக்க
பன்னுவீர்விவரமாக பாவையாள்போற்றினேமே.

வசனம்

ஆனால் கேளும் தெய்வலோக மாதர்களே! நாங்களும் ஸ்நான பானம் முடித்துவந்தோம் நோன்பு முறைகளை சொல்லுவீர்.

இரண்டாவது கன்னி கவி

சொல்லுவேன்கேளுமம்மா சுந்திரமங்கைமாரே
நல்லதோர்நோன்புசாமான் நங்கையாளுமக்குதந்தோம்
புல்லுவேன்நூலில்லாமல் புனிதநல்ஆலம்விழுதை
மெல்லியும்தான்முடிந்து விந்தையாய்வைத்தோமம்மா.

வசனம்

ஆனால் கேளும் பூலோகமாதர்களே! உங்களுக்கு வேண்டிய நோன்புசாமான்கள் கொடுத்தோம் நூல் இழையில்லாமல் போய் விட்டது. அதற்காக ஆலம்விழுதை பறித்து அதில் முடிபோட்டு தந்தோம் நோன்புநூற்பீர் ராஜகன்னிகளே.

புண்ணியவதி தரு

அம்மணியேவிரதந்தன்னை அரிவையாளுமே
அன்புடனேமுடித்துக்கொண்டோம் தெரிவையாளுமே

முதல் கன்னி தரு

பூசையதைமுடித்துக்கொண்ட பூவையேகேளும்
ஆசையுடன்முடிகயிரை கட்டிகொள்ளுமே

பாக்கியவதி தரு

கன்னியாளும்முடிகயர் தன்னைகட்டியே
கர்த்தன்பூசைதனைமுடித்தோம் கருத்தெட்டியே

இரண்டாவது கன்னி தரு

மங்கையரேயுங்களிட சாமான்தன்னையே
மகிழ்ச்சியுடன்எடுத்துக்கொண்டு செல்லும்கன்னியே

புண்ணியவதி தரு

செல்லுமென்றுதானுரைத்த கேளுமம்மணி
சேயிழைக்குவிடை தாருமம்மணி

முதல் கன்னி கவி

கேதாரிநோன்புதன்னை களிப்புடன்கொண்டதாலே
பேதகமில்லாமல்நீங்கள் பிசகாமல்வருஷாவருஷம்
மாதுமேஎடுக்கவேண்டும் மானிலந்தன்னில்தானே
கோதையுங்களில்லம் களிப்புடன்சென்றுவாரும்.

வசனம்

ஆனல் கேளும் மாதர்களே! இந்த கேதாரிநோன்பு விரதத்தை நீங்கள் நூற்றதாலே பிரதி வருஷம் தவாமல் எடுக்கவேண்டும் அப்படி எடுக்காவிட்டால் செல்வம்குறைந்து விருத்தியில்லாமல் போகும் உங்கள் இல்லம்சென்று வாருங்கள் நாங்கள் தெய்வலோகம் போய்வாரோம் அம்மணி.

பாக்கியவதி கவி

ஆசீர்வதித்தமிக அன்னையேகேளாயம்மா
பாசமாய்எங்களுக்கு பழுதில்லாநோன்புதன்னை
நேசமாயுரைத்ததாலே நாங்களும்சந்தோஷித்தோம்
வீசியேயுங்களில்லம் விந்தையாய்சென்றுவாரும்.

வசனம்

ஆனல் கேளும் தெய்வலோக மாதர்களே! நீங்கள் அன்போடு யுரைத்த கேதாரி ஈஸ்வரர் நோன்பு விரதத்தை வருஷாவருஷம் தவாமல் எடுத்துக்கொள்ளுகிறோம் உமது இல்லம் சென்றுவாரும் அம்மணியே.

பொது வசனம்

அகோதெப்படி யென்றல் தெய்வகன்னிகள் புண்ணியவதி பாக்கியவதிக்கு நோன்புநோற்றுஅவர்களுக்குஆசீர்வதித்து தெய்வலோகம் செல்ல இரண்டு மாதர்களும் வீட்டுக்கு வரும்போது இவர்கள்செய்த நோன்பு பலத்தினல் வீடு மாடிவீடாகவும் அதிக செல்வம் மிகுந்திருப்பதால் இவர்கள் தந்தை சிவகுணராஜன் கொலுவைநாடி வருகிறவிதம் காண்க.



## சிவகுணராஜன் வருகிற விருத்தம்

அந்தமாய்நகரந்தன்னை அரசாக்ஷிசெய்யும்வேந்தன்
மந்திரிமார்கள்சூழ மணிமுடியலங்கரித்து
பந்தியாய்நடனமாதர் பாசமாய்கவரிவீச
சுந்திரசிவகுணராஜன் சபைநாடிவருகின்றானே.

### சிவகுணராஜன் தரு

சிவனிடபாதந்தன்னை சிந்தையில்தினந்துதிக்கும்
சிவகுணராஜன்வந்தேன் கொலுசம்ப்ரமதாகவே
சிவகுணராஜன்வந்தேன்

அவனிதன்னிலுள்ள அரசர்கள்வணங்கிட
சுருள் ஆகமவேத புராணமுணர்ந்தவர்
அளவில்லாதான தருமத்தில்சிறந்தவர் சி

நவரத்தினமிழை நல்லமகுடம்மின்ன
கவசகுண்டலங்காதில் காந்திபளபளென்ன
சுருள் கரிபரிசேனைகள் இருபுரம்நெருங்கிட
காரிழைமாதர்கள் கவரிகள்வீசிட சி

அங்கஜன்போலவே அழகில்மிகுந்ததீரன்
தங்கமகுடம்சென்னில் தாங்கியாளும்வீரன்
சுருள் தத்திமிதோமென தாளங்கள்போட
மத்தளநாக சுரங்கள்பாடவே சி

மந்திரிமார்களும் — மனுதர்மவிதிப்படி
அந்தமுடனேநீதி — அமைச்சர்கள்கூடநாடி

சுருள் அந்தமார்கள் — ஆசிகூறிட
சுந்திரதேவி — மனமதுமகிழ்ந்திட — சி

### சிவகுணன் கவி

பெரும்பொருளறிந்துரைக்கும் மந்திரிமாரேகேளீர்
திருவடிபணிந்ததாலே தேசத்தில்சுகமாய்வாழ்வீர்
அருமைஎன்தேவிதன்னை அரசனும்அழைத்தேனென்று
பெருமையாய்சபைமுன்பாக பூவையைவரச்செய்வீரே.

### வசனம்

ஆனால் சேனும் மந்திரிமார்களே! எனது தேவியாகிய சிவகுண வல்லியை சீக்கிரம் அழைத்து வருவீர்கள்.



### சிவகுணவல்லி வருகிற விருத்தம்

நாதனுமழைத்தசேதி நங்கையாள்காதில்கேட்டு
கோதியேசடைமுடித்து குங்குமதிலகம்பூசி
பாதசிலம்புதண்டை பீலாழிகலகலென்ன
ஆதிசிவனடியைபோற்றி அரிவையும்வருகின்றாளே.

### சிவகுணவல்லி தரு

சிவனிடபாதத்தை — சிந்தையில்மறவாமாது
சிவகுணவல்லியும்வந்தாள் — கணவன்பக்கல்
சிவகுணவல்லியும்வந்தாள்

நவரத்தினமிழைத்த — நல்லபணிகள்பூண்டு
சுருள் நாடியேசேடி — மாருடன்கூடி
நல்லகுயிலென — ராகமும்பாடி — சி

வல்லிசாதக்கொடிபோல் மெல்லியிடை துவள
முல்லையரும்பைபோன்ற பல்வரிசைப்பவழ
சுருள் மெல்லியென்புருவம் வில்லதைமாற்றும்
சொல்லும்ரதியென உருவமும்தோற்றும் சி

சன்னல்பின்னல்சடை சிவிமிகமுடித்து
அன்னநடையைபோல அரிவைமிகநடித்து
சுருள் அத்தர்புனுகு வாடையும்வீச
அன்புடன்மாதர்கள் இன்பமாய்பேச சி

இன்றுநாளில்நாதன் என்னையழைத்தசேதி
அன்புடன் இன்னதென் றறிந்திடவேநீதி
சுருள் அவசரமாக அரிவையும்சென்று
கவனமாய்கேட்க கன்னியும்இன்று சி

## சிவகுணவல்லி தரு

நாதாயுன்பாதம்வந்தனம் இன்று
நல்லமுல்லைமலர்கொண்டு மெல்லியாளும்சாற்றி
நாதாயுன்பாதம்வந்தனம்

காதலுடையநாதா கன்னிஎந்தனைசீராய்
சுருள் கருத்துடனழைத்த காரணமறிய
பொருத்தமாய்சொல்லும் பூவைக்குதெரிய நா

## சிவகுணராஜன் தரு

பாதம்பணிந்ததேவியே இந்த
பாரினில்சுகமாய் காரிழைவாழ்குவாய்
பாதம்பணிந்ததேவியே

பேதகமில்லாத பிரியமுள்ளபெண்ணே
சுருள் பிஞ்சுமதியணிந்த பரமன்செயல்தானே
பெருகியேசெல்வம் மிகுந்ததேனேமானே பா

## சிவகுணவல்லி தரு

செல்வமில்லாமல்வாடியே நாம்
சிந்தையும்நொந்துமே தரித்திரமடைந்தோமே
செல்வமில்லாமல்வாடியே

எல்லாம்சிவன்செயலோ இன்றுபுதுமையாக
சுருள் இருக்குதேஅரண்மனை என்னவிநோதம்
பெருமையாயாவரும் பார்க்கஙெம்பீரம் செ

சிவகுணராஜன் தரு

கோட்டைமதில்களைப்பாருமே நல்ல
கோமானைபோலவே பூமியோர்புகழ்ந்திடு
கோட்டைமதில்களைப்பாருமே
நாட்டினில்எதிரிமன்னர் நமக்குக்கிடையாதுபெண்ணே
சுருள் நம்மிடவறுமை சிறுமையும்நீங்கி
செம்மையாய்செல்வம் மிகுந்ததேஓங்கி கோ

சிவகுணவல்லி கவி

எந்தனிடபிராணநாதா இத்தனைகாலமாக
சிந்தையும்நொந்துவாடி திரவியமில்லாததாலே
விந்தையாசிறுமனையில் வறுமையாய்வாழ்ந்திட்டோமே
அந்தமுள்ளநமதுவீடு அடையாளந்தெரியவில்லையே.

வசனம்

ஆனால் கேளும் நாதா! நாம் வறுமையுண்டாகி இத்ததனைகாலமாக சிறுவீட்டில் இருந்தோமே இன்று வீடு பெரியமாடிவீடாக இருக்கிறதே எல்லாம் சிவன்செயலோ நாதா.

சிவகுணராஜன் தரு

சிவனிடசெயல்தானே நமக்கு
செல்வம்மிகுந்ததேமானே
எவர்செய்தபுண்யமோ இந்தசெல்வம்பெற்றோம்
இன்பமாய்வாழலாம் அன்புமிகயுற்றேன் சி

சிவகுணவல்லி தரு

மன்னவாஎன்செய்வேன்நாதா நமது
மகள் இருவரும்தோதா
அன்புடன்ஜலந்திரட்ட அரிவையும்நதிக்கு
கன்னியும்சென்றாளே; காணோமேபதிக்கு ம

சிவகுணராஜன் தரு

வீடுஅடையாளந்தெரியாமல் நொந்து
மெல்லியும்வாடுவார்அறியாமல்
வாடிஅரண்மனை வஞ்சியாளேவிட்டு
தேடியேமகளை தெருவில்பார்ப்போம்தொட்டு வீ

சிவகுணவல்லி தரு

ஜலம்திரட்டிக்கொண்டுசெல்வியும் அதோ
சேர்ந்துஇரண்டுமெல்லியும்

கலைமுகவதனே கன்னியும்வாராளே
களிப்புடன்மன்னவா கன்னியைபாரீதோ ஜ

புண்ணியவதி வேறு தரு

தங்கையேஇருவருங்கூடியே அடிகூடியே இப்போ
கெங்கைவிட்டுசெல்வோம்நாடியே மனைக்குநாடியே

பாக்கியவதி தரு

வீதிகள்தன்னை தாண்டியே நாமுந்தாண்டியே நமது
வளவுக்குவந்தோமேவேண்டியே பரனைவேண்டியே

புண்ணியவதி தரு

இதுஎன்னபுதுமையாய்இருக்குதே இன்றுஇருக்குதே நமது
இல்லத்தைகாணேமேவெருக்குதே உள்ளம்வெருக்குதே

சிவகுணவல்லி தரு

வாரும்வாரும்எந்தன்செல்வியே அருமைசெல்வியே நமது
வீடுஇதுவாகும்செல்வியே கேளும்மெல்லியே

சிவகுணராஜன் தரு

அம்மம்மாசெல்வியேவாரும் கூடிவாரும் நமது
அரண்மனை இதுவாகும்பாரும் அம்மாநீரும்

பாக்கியவதி தரு

விமலனிடசெயல்தானோ இன்றுதானோ வீடு
விந்தையாய்இருக்குதேதந்தையே மிகவிந்தையே

புண்ணியவதி கவி

என்னிடஅம்மாதாயே இன்றையநாளில்தானும்
கன்னியாள்நதிக்குச்சென்றோம் கனங்குழைதெய்வகன்னி
அன்புடன்நோன்புதன்னை அரிவையும்நூற்றதாலே
மன்னியேஅவர்களோடு மங்கையும்நோம்பெடுத்தோம்.

வசனம்

ஆனால் கேளும் தந்தைதாயே! இருவரும் நதிக்கு சென்றோம் தெய்வலோகத்து கன்னியர்கள் கேதாரீஸ்வரர் நோன்பு நூற்றார்கள் அவர்களை கேட்டு நாங்களும் நோன்பு எடுத்து அவர்களிடம் ஆசீர் வாதம்பெற்று நாங்கள் வீடு வருவதற்குள் பரமசிவன் செயலால் செல்வம் மிகுந்து அரண்மனைகள் விநோதமாக உண்டானது தந்தை தாயே.

சிவகுணராஜன் தரு

கோதையரே கேதாரி நோன்புதன்னையே
கொள்ளுவீர் வருஷம் தவராமல் கன்னியே

புண்ணியவதி தரு

தந்தையரே தெய்வ கன்னிமார்களும்
தந்தாரி தோபக்ஷணங்கள் தின்றுபாருமே

சிவகுணராஜன் தரு

என்னபுண்யம் செய்தேமம்மா எந்தன் கண்மணி
இதைபோலசுவை தின்றதில்லை விந்தைபெண்மணி

சிவகுணவல்லி தரு

என்னபுத்தியுந்தனுக்கு எந்தன் நாதனே
கன்னியர்க்குமணம்முடிக்க வேண்டும்நீதனே

சிவகுணராஜன் கவி

செல்வமுந்தான்பெருகி சீமானுயானதாலே
மெல்லியர்இருவருக்கும் மணமதுமுடிக்கவேண்டும்
நல்லதோர்வழியில்பெண்ணை நாமுமேகொடுப்பதற்கு
சொல்லுவாய்யோசனை சுந்திரமானதேவி.

வசனம்

ஆனால் கேளும் தேவியே! நமது பெண்ணை நல்ல குலத்து அரசரை பார்த்து திருமணம்செய்து கொடுக்கவேண்டும் எந்த தேசத்து ராஜனுக்கு பெண்ணை கொடுக்கலாம் சொல்லும் மாதே.

சிவகுணவல்லி தரு

சொந்தவழியில்பெண்ணை சந்தேகமில்லாமல்
சுந்திரனுதனரே தருவீரே நீரும்
சிந்தைமகிழ்ச்சியுடன் கூறுவீரே சொ

சிவகுணராஜன் தரு

எந்ததேசராஜனுக்கு பெண்ணைநாம்கொடுப்பது
எந்தனுக்குரைத்திடும்மாதே நீயும்
சந்தேகமில்லாமல்கோதே எந்

சிவகுணவல்லி தரு

எந்தனிடஅண்ணன்மகன் சுந்திரன்தானிருக்க
எண்ணமுங்கொண்டேனே நாதா பெண்ணை
திண்ணமாய்கொடுத்திடபோதா எந்

97442

சிவகுணராஜன் தரு

உந்தனிடஅண்ணன்மகன் உதவாதுஅவன்போடி
எந்தனிடசெல்விக்குத்தானே புருஷன்
விந்தையுள்ளவனில்லைமானே உந்

சிவகுணவல்லி விருத்தம்

சுந்திரபிராணநாதா சண்டையும்நமக்குவேண்டாம்
இந்தவோர்யுலகந்தன்னில் இருந்திடும்ராஜமன்னர்
வந்துமேபெண்ணைகேட்டால் விபரத்தைதானறிந்து
சந்தேகமில்லாமல் செல்வியைகொடுப்போம்நாமே.

வசனம்

ஆனால் கேளும் நாதா! நாம் இருவரும் சண்டையிட்டுக்கொண்டுயிருப்பதில் என்ன பலன்? வேற்றரசர் வந்து பெண்கேட்டால் அவர் வழிகளை விசாரித்து செல்வியை கொடுப்போம் நாதா.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் சிவகுணராஜன் பெண்சாதியும் இருவருமாக வார்த்தையாடிக்கொண்டிருக்க ராஜகிரி அரசன் பெண்கேட்க கொலுவைநாடி வருவது.



ராஜகிரிராஜன் வருகிற கவி

அத்தியையுரித்தணிந்த ஆண்டவன்பாதந்தன்னை
பத்தியாய்துதிக்குந்தீரன் பாசமாய்தானெழுந்து

மெத்தவேமந்திரிமார்கள் மலரடிபோற்றிசூழ
ரத்தினமகுடம்பூண்டு ராஜனும்வருகின்றானே.

ராஜகிரிராஜன் தரு

தேசமன்னர்புகழும் ராஜகிரியில்வாசன்
தீரன்கொலுவதாகினான் விந்தையதாக
திருவடிமந்திரி போற்றவே தே

சென்னியில்மணிமகுடம் மின்னும்பணிசொலிக்க
சேயிழையர்ஆலம்ஏந்தவே ராஜதீரன்
அன்புடனே வந்துமேவினான் தே

சித்திரபுஜங்கள் துன்ன ரத்தினமாலையாட
சிவன்பாதம்தன்னைகோரியே ராஜதீரன்
சிறப்புடனேவந்துமேவினான் தே

திருமணந்தான்முடிக்க சிந்தையில்தானினைந்து
பெருமையாய்நகர்செல்லவே சுந்திரதீரன்
பூரிப்பாய்வந்துமேவினான் தே

ராஜகிரிராஜன் கவி

மந்திரிமாரேகேளீர் மணமதுமுடிக்கவேண்டி
சிந்தையில்கொண்டதாலே சீக்கிரம்கெங்கைபுரம்
சுந்திரசிவகுணன் செல்வியைகேட்கவேண்டும்
விந்தையாய்எந்தன்பின்னே மந்திரிவருகுவீரே.

வசனம்

ஆனால் கேளும் மந்திரிமார்களே! எனக்கு திருமணம் முடிக்க ஆலோசனைகொண்டேன் ஆதலால் கெங்கைபுரம் ராஜரீகம் செய்யும் சிவகுணராஜன் செல்வியைகேட்க பிரியங்கொண்டேன் வாரும் மந்திரி மார்களே.

ராஜகிரிராஜன் தரு

ராஜகிரிராஜன்
பெண்பார்க்கநடந்தானே
பெண்பார்க்கநடந்தானே

பெண்பார்க்கநடந்தானே புத்திமந்திரியோடு
பட்டணம்விட்டுமே பாசமாய்நாடியே பெ

நற்குணமந்திரியே நல்லசகுனங்கண்டோம்
அற்புதமாகவே அனைவோரும்செல்லுவோம் பெ

சொந்தவழியான சிவகுணராஜனை
விந்தையாய்பெண்கேட்டு மணமதுமுடிப்போமே பெ

ராஜகிரிராஜன் கவி

மாசில்லாமறையுணர்ந்த மந்திரிமாரேகேளீர்
தேசமுந்தான்கடந்து சீக்கிரங்கெங்கைபுரம்
ஆசையாய்வந்ததாலே அரசனைநாமுங்கண்டு
பேசியேபெண்ணைகேட்டு பிரியமாய்மணம்முடிப்போம்.

வசனம்

ஆனல் கேளும் மந்திரிமாரே! கெங்கைபுரம் வந்ததால் சிவகுண ராஜனைக்கண்டு பெண் கேட்போம் மந்திரியே.

சிவகுணராஜன் தரு

வாரும்வாரும்ராஜனே சந்தோஷங்கொண்டேன்
வாரும்வாரும்ராஜனே
வாரும்வாரும்மன்ன மந்திரிமாரோடு
சீருடனேவந்தசேதியை யுரைத்திடுவாய் வா

ராஜகிரிராஜன் தரு

பெண்கேட்கவந்தேனே பிரியமாகவே
பெண்கேட்கவந்தேனே
வண்ணமுள்ளயுந்தன்மகளை எந்தனுக்கு
திண்ணமாகக்கேட்க தேடிமிக்கவந்தேன் பெ

சிவகுணராஜன் தரு

செல்வியைதருகதடையில்லையே ராஜமன்ன
செல்வியைதருசதடையில்லையே
செல்வியைதருகிறேன் சிந்தையும்வாடாதீர்
நல்லதுயுந்தனிட நகரம்பேரைசொல்வீர் செ

ராஜகிரிராஜன் தரு

ராஜகிரிஎந்தன்தேசமே ஓய்மன்னகேளும்
ராஜகிரிஎந்தன்தேசமே
ராஜகிரியையாளும்ராஜன் எந்தன்பேரு
பேசிமனமகிழ்ந்து பெண்ணைத்தருவீர்சிரு ரா

சிவகுணராஜன் கவி

நங்கையேசொல்வேன்கேளாய் ராஜகிரியிலிருந்து
மங்கையைகேட்பதற்கு மன்னனும்வந்ததாலே
பொங்கியேமகிழ்ச்சியாக பூவையைகொடுக்கப்போறேன்
சங்கையில்லாமல்சீக்கிரம் பதிலுரைப்பாய்.

வசனம்

ஆனல் கேளும் பெண்ணே தேவியே! ராஜகிரியிலிருந்து ராஜன் வந்து பெண்ணை கேட்கிறபடியால் புண்ணியவதியை கொடுக்கப் போறேன் உன் மனக்கருத்தைச் சொல்லும் பெண்ணே.

சிவகுணவல்லி தரு

சொந்தமில்லாமன்னனுக்கு எந்தவிதமாகபெண்ணை
கொடுக்க நாதா கொடுக்க
எந்தனிடம்சொல்லவந்தீர் என்னமதியுந்தனுக்கு
நாதா சொன்னீர் வாதா

சிவகுணராஜன் தரு

வந்தொருவர்பெண்ணைக்கேட்டால் எந்தவிதம்இல்லைஎன்று
சொல்வேன் அடி சொல்வேன்
சிந்தைநொந்துபேசவந்த செரிக்கியேஅப்புரம்
செல்லடி அடி நில்லடி

சிவகுணவல்லி தரு

அண்ணன்மகன்தனக்கு எந்தனிடசெல்விதன்னை
கொடுப்பேன் நாதா கொடுப்பேன்
வண்மையுள்ளசெல்விதனை எண்ணங்கொண்டீர்மன்னனுக்கு
கொடுக்க மாதை கொடுக்க

ராஜகிரிராஜன் தரு

உந்தனிடபெண்ணுவேண்டாம் எந்தனிடநகரமே
போரேன் மாமா போரேன்
இந்தயுலகமதில் விந்தையுள்ளபெண்ணைபார்த்து
மணமே செய்வேன் குணமே

சிவகுணராஜன் தரு

பெண்ணதைதருகிறேன் போகாதேராஜமன்னு
நில்லும் பதில் சொல்லும்
உண்மையாகயுந்தனுக்கு திண்ணமாகவாக்களித்து
தவறி நடப்பேனே பதறி

சிவகுணவல்லி தரு

சொந்தம்யுனக்குஏது எந்தனிட மகள்தன்னை
கொடுக்க நாதா தடுக்க
விந்தையுள்ளபெண்ணைகேட்க வந்தமிகராஜமன்னு
செல்லும் நீரும் செல்லும்

சிவகுணராஜன் கவி

வந்துமேமன்னன் தானும் வற்புறுத்திபெண்ணேகேட்க
விந்தையாய்மாதைநாம் வைத்துமேஇருக்கொணுது
சிந்தையும்வாடவேண்டாம் சிறப்புடன்செல்வியற்கு
சுந்திரமன்னன் தன்னை திருமணம்முடிப்போம்வாராய்.

வசனம்

ஆனல் கேளும் பெண்ணே! மங்கைபருவ காலமான பெண்ணை நாம் மனையில் வைத்திருக்கப்படாது. ஆதலால் உன் மனசம்மதம் கொள்வாய் பெண்ணே.

சிவகுணவல்லி கவி

சரிதான்பிராணநாதா சம்மதப்படியேதானும்
பரிவுள்ளசெல்வியான புண்ணியவதிமாதை
நெறியுள்ளமன்னனுக்கு நானிலத்தோரறிய
பிரியமாகமணம் பூரிப்பாய்செய்வீர்தானே.



ராஜகிரிராஜனுக்கும் புண்ணியவதிக்கும் திருமணம்

தரு

திருமணஞ்செய்தாரே புண்ணியவதிக்கு
திருமணஞ்செய்தாரே

திருமணஞ்செய்தாரே பெருமையாய்மன்னனுக்கு
அருமறைவேதியர் ஒருமையாய்கூடியே தி

அரசாணிகால்நாட்டி அருங்காப்புமிககட்டி
வரிசையுடனேசாலுங் கரகம்மிகவைத்து தி

காரிடிபோல்முரசு பேரிகைமுழங்கிட
காசினிமன்னர்கள் வந்துமேசூழ்ந்திட தி

மாங்கல்யம்மணமகன் மாதுக்குசூட்டிட
மாதவமறையவர் ஆசீர்வதித்திட தி

சிவகுணராஜன் கவி

மருகனுய்எனக்குவந்த மன்னனேகேளுமிப்போ
திருமணஞ்செய்துவைத்தேன் தேசத்தோன் தான்புகழ
அருமைஎன்செல்விதன்னை அழைத்துமேயுந்தனிட
பெருமையுள்ளநகர் பூரிப்பாய்சென்றுவாரும்.

வசனம்

ஆனல் கேளும் மருகனே! உமதிஷ்டப்படி புண்ணியவதியை திருமணம் செய்து வைத்தேன் உந்தன் நகரம் சென்று வாரும் மருமகனே.

புண்ணிவதி தரு

ஆசையுள்ளதந்தையரே அடிபணிந்தேனே
அன்பாய்நாதனேடு சென்றுவாரேன் துணிந்தேனே

சிவகுணராஜன் தரு

பாதமதைபோற்றிசெய்த பாவையேவாழ்வாய்
பத்தாவோடுவொத்துநீயும் பூரிப்பாய்வாழ்வாய்

புண்ணியவதி தரு

அருமையுள்ளத்தாயேயுந்தன் அடிபணிந்தேனே
ஆசைநாதனேடுசென்று வாறேன்சொன்னேனே

சிவகுணவல்லி தரு

திருவடிபணிந்துநின்ற செல்வியேவாழி
சென்றுவாரும்நாதனேடு நாளுமேவாழி

ராஜகிரிராஜன் கவி

ஆசையும்பாசமுள்ள அத்தையேமாமாகேளாய்
காசினியோர்புகழ கன்னியைஎனக்குத்தந்தீர்

நேசமாய்தேவியோடு நகரமேசென்றுவாறேன்
பேசியேஅரண்மனையில் பூரிப்பாய்இருப்பீர்தானே.

வசனம்

ஆனல் கேளும் மாமி மாமனுரே! தேவியோடு நகரம் சென்று வருகிறோம் சுகமாக இருப்பீர்மாமியே.

புண்ணியவதி தரு

நாதனேசரணம்உந்தன்பாதம் மாதுமேசரணம்
பாதபுயந்தன்னில் பரிவுள்ளமலர்சாற்றி
பேதகமில்லாமல் மாதுபணிந்தேன்போற்றி நா

ராஜகிரிராஜன் தரு

தேவியேவாழிசுகமாக சுந்தரிவாழி
தேவியாளேஎந்தன் திருவடிபணிந்ததால்
பாவையேசுகமாக பாரினில்வாழ்குவாய் தே

புண்ணியவதி தரு

என்னிடநாதாராஜகிரி ஏகுவீர்நீதா
அன்புள்ள தந்தை அரண்மனைவிட்டுமே
அரிவையாளுங்கூடி வந்தேனேதொட்டுமே ஏ

ராஜகிரிராஜன் தரு

வந்தோமேமானேஎந்தன் நகர்விந்தையாய்தானே
எந்தன் அரண்மனை இதோபாரும்பெண்ணே
இன்பமாய்என்னேடு இருந்திடுவாய்கண்ணே வ

புண்ணியவதி கவி

என்னிடபிராணநாதா எந்தனை தான்மணந்து
அன்புடன்நகருக்கு அழைத்துமேவந்ததாலே
கன்னியும்மனம்மகிழ்ந்தேன் கடவுளின்கிருபையாலே
பன்னியேவார்த்தையாடி பாசமாய்இருப்போம்நாமே.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் இருவரும் ராஜகிரியில் சுகமாக இருக்க அழகாபுரி பட்டணத்து ராஜன் பாக்கியவதியை திருமணம் செய்ய ஆலோசித்து கொலுவைநாடி வருகிறவிதம் காண்க.



## அழகாபுரிராஜன் வருகிற கவி

சுந்திரந்தனில்மிகுந்த சிவபெருமான்பாதம்
சிந்தையில்மறவாதீரன் சீர்பணியலங்கரித்து
மந்திரிநீதிகூற மறையவர்வேதமோத
அந்தமாய்அழகாபுரி அரசனும்வருகின்றானே.

### அழகாபுரிராஜன் தரு

| | | | |
|---|---|---|---|
| | அகிலத்தில்புகழ்பெற்ற | திகழும்மதனையொத்த | |
| | அழகாபுரிராஜன்வந்தேன் | கொலுவைநாடி | |
| | அழகாபுரிராஜன்வந்தேன் | | |
| | பகலவனுதையம்போல் | பதக்கம்மார்பில்மின்ன | |
| சுருள் | பாரினில்மன்னர் | கோரிபணிந்திட | |
| | தீரசூரர்கள் | வந்துவணங்கிட | அ |
| | ரத்தினத்தாலிழைத்த | நல்லமணிமகுடம் | |
| | முத்தும்பளபளென்ன | வெற்றியுள்ள திடம் | |
| சுருள் | மந்திரிமார்கள் | நீதிகூறிட | |
| | மாதவமுனிவர் | ஆசிர்வதித்திட | அ |
| | திரிபுரத்தையெரித்த | சிவனிடபாதம் | |
| | பிரியமுடனே துதி | போற்றிதொழுவேன்சதம் | |
| சுருள் | பாவையர்கவரி | பாசமாய்வீச | |
| | பாவலர்நாவலர் | தாவியேபேச | அ |
| | பாரினில்புகழ்பெற்ற | பாக்கியவதிஎன்னும்மாதை | |
| | கோரினேன்மணம்முடிக்க | களிப்புடனேகோதை | |

சுருள் கரிபரிசேனை திரமுடன்கொண்டு
பிரியமுடன்மணம் முடிப்பேன்கண்டு அ

அழகாபுரிராஜன் கவி

என்னிடமந்திரிமாரே இன்றையநாளில்தானும்
நன்னகர்கெங்கைபுரம் நாடியேநாமும்சென்று
மன்னன்சிவகுணன் மகள்பாக்கியவதியை
உன்னிதமாகமணம் உத்தமன்முடிப்பேன்தானே.

வசனம்

ஆனல் கேளும் மந்திரியே! கெங்கைபுரம் சென்று சிவகுண ராஜன் புதல்வி பாக்கியவதியை திருமணம் முடிக்கவேண்டும் பின் வருவீர் மந்திரிமார்களே.

அழகாபுரிராஜன் தரு

அழகாபுரிதன்னைவிட்டுமே ராஜமன்னன்
அன்புடனே தான்நடந்தானே விந்தையதாக
ரத்தினமகுடம்சிரசில்மின்னவே தகதகென்று
நாகரீகமாகநடந்தானே ராஜமன்னன்
தேசம்புகழும்கெங்கைபுரம்கண்டு அதிவேகமாய்
சேனையோடுவந்துசேர்ந்தானே ராஜமன்னன் அ

சிவகுணராஜன் கவி

வஞ்சியேஎன்னசெய்வேன் வள்ளலின்செயல்தானே
பஞ்சுமெல்லடியையொத்த பாக்கியவதியாள்மாதை
கொஞ்சியேமணம்முடிக்க குணமுள்ளமன்னர்காணேன்
சஞ்சலமாகதினம் சிந்தையும்வாடுதையோ.

வசனம்

ஆனல் கேளும் பெண்ணே! பாக்கியவதியை திருமணம்செய்து கொள்வதற்கு எந்த மன்னரும் வரவில்லையே பெண்ணே.

அழகாபுரிராஜன் கவி

மன்னர்மன்னரெல்லாம் மணிமுடிதான்வணங்கும்
மன்னனேசொல்வேன்கேளாய் மாபெருஞ்சேனையோடு
மன்னனும்யோடிவந்தேன் மனதினிலோசனையாய்
மன்னனேஎனக்குபதில் மகிழ்ச்சியாய்சொல்லுவீரே.

சிவகுணராஜன் தரு

என்னயோசனையாகநீரும் மன்னா
உன்னிதமாகவந்தீர்கூறும்
அன்புடன்வீற்றிருக்க அளித்தேன்சிம்மாதானம்
அரசனேவந்தசேதி அறிவிப்பாயேகனம் எ

அழகாபுரிராஜன் தரு

உந்தன்செல்வி தன்னை கேட்க இன்று
விந்தையுடனேவந்தேன் பார்க்க
சந்தேகமில்லாமல் தையலை தருவீரே
சகலருமறியவே சோபனம்முடிப்பீரே உந்

சிவகுணராஜன் தரு

பெண்ணைத்தருகத்தடை இல்லை மன்னா
பூவையைக்கேட்டுவாரேன் தொல்லை
வண்ணமுள்ளமாதே வந்தஇன்றுமன்னனுக்கு
மண்ணோர்புகழ்ந்திட மாதைகொடுக்கப்போறேன் பெ

சிவகுணவல்லி தரு

உந்தன் மனதின்படி நாதா செல்வியை
விந்தையாய்கொடுப்பீரே நீதா
சந்தோஷம்கொண்டேனே செல்வியைதந்திட
சுந்திரமன்னனுக்கு திருமணம்செய்திடு உந்

சிவகுணராஜன் கவி

அப்படியானால்சரி அரிவையேசொல்வேன்கேளாய்
துப்புள்ளசெல்வியற்கு சீர்பணியலங்கரித்து
கப்பியேமன்னரெல்லாம் களிப்புடன்சூழ்ந்திருக்கும்
இப்பெருஞ்சபைதனில் ஏந்திழையைகொண்டுவாரும்.

வசனம்

ஆனால் சேளும் பெண்ணே! நமது செல்வியாகிய பாக்கியவதியை மணக்கோலத்தோடு அழைத்துவாரும் பெண்ணே.



## அழகாபுரிராஜனுக்கும் பாக்கியவதிக்கும் திருமணம்

தரு

கல்யாணம்செய்தாரே விந்தையாக
கல்யாணம்செய்தாரே

கல்யாணம்செய்தாரே கன்னிபாக்கியவதியை
நல்லஅழகாபுரிராஜ மன்னனுக்கும் கல்

சாலுங்கரகமும் சட்டமாய்வைத்திட்டார்
சரவிளக்குகளை வரிசையாய்கொடுத்திட்டார்
சகலருமறியவே மாங்கல்யம்சூட்டினுர் கல்

சிவகுணராஜன் கவி

நல்லதுராஜமன்னு நங்கையையுந்தனுக்கு
எல்லேயோர்தானறிய இன்றுமேமணம்முடித்தோம்
சொல்லதுதவரிடாத சுந்தரசெல்வியோடு
நல்லதோர்அழகாபுரி ராஜனேசென்றுவாரும்.

வசனம்

ஆனுல் கேளும் மருமகனுகிய ராஜமன்னனே! இருவரும் சந்தோஷமாக உங்கள் நகரம் சென்றுவாரும் ராஜனே.

பாக்கியவதி தரு

நாதனேயுந்தன்பாதம் போற்றினேன்
நல்லமலர் மெல்லிகொண்டு
நாறியும்பணிந்து மலர்சாற்றினேன் நாத

அழகாபுரிராஜன் தரு

அரிவையேசுகமாக வாழ்வாயே
ஆசிர்வாதம்அளித்தேன் பெண்ணே
ஆசையாய்நடந்துகூட வாருமே அ

பாக்கியவதி தரு

மன்னனேயுந்தனேடு கூடவே
மலேவனம்சுனே தாண்டி
மங்கையும்நடந்துவந்தேன் நாடியே ம

அழகாபுரிராஜன் தரு

வந்தோமேஎந்தன்நகர் பெண்மணி
வஞ்சியாளே கொஞ்சிகூடி
விந்தையாய்பெண்ணே இருப்பாய்சோடியே வந்

பாக்கியவதி கவி

என்னிடபிராணநாதா எந்தனைமணம்முடித்து
அன்புடன்நாமுங்கூடி அனேகநாள்வாழ்ந்துவந்தோம்
கன்னியாள்எந்தனுக்கு கற்பமுந்தங்கிபத்து
மன்னியேமாதமாச்சு மயக்கம்வருகுதையோ.

வசனம்

ஆனால் கேளும் பிராணபதியே! நாம் திருமணம்முடித்து அநேக நாளாக ஆனதால் எனக்கு கெற்பந்தங்கி மாதம்பத்தும் சரியானபடியால் மயக்கமும் இடையும் நோகுதே என்னசெய்வேன் தெய்வமே.

பாக்கியவதி தரு

என்னநான்செய்வேனேடிதோழிகளா அம்மாபாங்கிகளா
இடையுமெத்தநோகுதடிதோழிகளா அம்மாபாங்கிகளா

கன்னிநான்என்னசெய்வேன்பாங்கிகளா அம்மாதோழிகளா
கருத்துமிகவாடுதோடிதோழிகளா அம்மாபாங்கிகளா

மயக்கம்மெத்தகாணுதோடிபாங்கிகளா அம்மாதோழிகளா
மார்பெல்லாம்நோகுதடிதோழிகளா அம்மாபாங்கிகளா என்

தோழிகள் தரு

மைந்தன்பிறந்தானம்மணி தெள்ளுமணிபோல
மைந்தன்பிறந்தானம்மணி

மைந்தன்பிறந்தானம்மா மாயன்மதனைபோல
மண்ணினில்கிடையாதே மைந்தனைபோலமேலா மை

கண்ணழகும்புருக்கழகும் கண்விழிமையழகும்
வண்ணமுள்ளபாலன்வடிவத்தை என்னசொல்வேன் மை

பாக்கியவதி கவி

ஆலத்தைபுண்டஈசன் ஆண்டவன்கிருபையாலே
பாலனும்பிறந்தானிதோ பாருமேகண்ணால்நாதா
சீலமாய்மைந்தனுக்கு சிறப்புடன்வாழ்ந்திருக்க
மேலானபெயர்தனை மன்னவாவைப்பீர்தானே.

வசனம்

ஆனால் கேளும் பிராணபதி! கடவுள் கிருபையால் செல்வன் பிறந்தான் ஆதலால் நாமதேயம் வைப்பீர் நாதனே.

அழகாபுரிராஜன் கவி

மானிலத்தோர்தான்புகழ மைந்தனும்பிறந்ததாலே
ஞானசீலனென்று நாமதேயம்வைத்தேன்

தேனனமொழியுரைக்கும் தேவிநீபிரியமாக
தானுமேவளர்த்துவாராய் தனையனைசெல்வமாக.

வசனம்

ஆனல் கேளும் பெண்ணே! மைந்தனுக்கு ஞானசீலனென்று நாமதேயம்வைத்தேன் அன்போடு பாதுகார்ப்பாய் தேவியே.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் பாக்கியவதி மைந்தனை அதிக செல்வத்தோடு வாழ்ந்துக்கொண்டு வருகிறகாலத்தில் பாக்கியவதி நோன்பைமறந்து நோன்புகயிரை அவரைப்பந்தலின்மேல் போட்டுவிட்டாள் அப்படி மறந்து போனதினாலே வறுமைமேலிட்டு மறுமண்டலத்து ராஜனாகியமன்னன் கொலுவைநாடி வருவது.



மறுமண்டலராஜன் வருகிற கவி

வண்ணமாய் அழகாபுரி தன்னையாளும்
மன்னனும் கப்பமது கட்டிடாமல்
திண்ணமாய் வாழ்ந்துமே வருவதாலே
தீரனுங் கோபமது மிகவேகொண்டு
குண்ணமல் மணிமுடியலங்கரித்து
கோதையர்க ளிருபுரமும் கவரிவீச
மண்ணுவிண்ணு மதிரவே படையைகூட்டி
மறுமண்டல ராஜனும் வருகின்றானே.

மறுமண்டலராஜன் தரு

மாரன்வடிவம்போன்றதீரன் விந்தையதாக
மறுமண்டலராஜன்வாரேன்

காரிடிபோல்முரசுபேரிகை முழங்கிட
சுருள் காவலர்பலர் தாவிசூழ்ந்திட
தேவிமார்களும் தாவிசூழ்ந்திட மார

ரத்தினமணிமகுடம்மின்ன தகதகென்று
எத்திசையோருங்கீர்த்திபன்ன

பத்திபத்தியாய்மார்பில் பதக்கம்பளபளென்ன
சுருள் பாவையரிருபுரம் கவரிவீசிட
சேவடிபணிந்து மன்னர்பேசிட மார

வில்லம்புகெதைவாளுந்தாங்கி அதிவீர
வல்லமைதீரர்சூழலங்கி

நல்லகுணமந்திரி நீதிகள்கூறிட
சுருள் நற்பரிசேனைகள் இருபுரம்நெருங்கிட
மற்புயமறையவர் ஆசீர்வதித்திட மார

அழகாபுரிநகரையாளும் ராஜமன்னன்
அதிககெர்வங்கொண்டுநாளும்

வழக்கப்படியேகப்பம் மன்னனுங்கட்டாமல்
சுருள் வேந்தனுமிருப்பதால் விரைவுடன்சென்று
சிந்தைகலங்கசிறை பிடிப்பேனே இன்று மார

மண்டலராஜன் கவி

மந்திரிமாரேகேளீர் மனதினில்சிந்தைகொண்டேன்
அந்தமாயழகாபுரி அரசன்மேல்படையெடுத்து
சுந்திரன் தன்னைவென்று திரவியம்கொள்ளையிட்டு
விந்தையாய்வருகவேண்டும் வீரரேவருகுவீரே.

வசனம்

ஆனால் கேளும் மந்திரிமார்களே! அழகாபுரி ராஜன்மேல் படையெடுத்து சென்று அவன் நகரை கொள்ளையிட்டு அவனைசிறைபிடித்து வருகுவோம் வாரும் மந்திரி.

மண்டலராஜன் தரு

ரதமேறிசென்றானே மண்டலராஜன்
ரதமேறிசென்றானே
ரதமேறிசென்றானே ரணபேரிமுழங்கிட
பதியிலுள்ளமன்னர் பார்த்துபயந்திட ரத

வீரசூரமன்னர்தீரர்கள் ஒருகோடி
வெகுண்டுசிங்கம்போல் ராஜர்களுங்கூடி ரத

மண்டலராஜன் கவி

ஆரடாயழகாபுரிஅரசனே சொல்வேன்கேளு
சீரடாயுன்மேல்படை தீரனும்எடுத்துவந்தோம்
பாரடாக்ஷணநேரத்தில் பரிகரிசேனைதன்னை
பேரடாமடித்திடுவேன் போருக்குவருகுவாயே.

வசனம்

ஆனல் கேளடா அழகாபுரிராஜனே! உன்மேல் படையெடுத்து வந்தேன் சீக்கிரம் யுத்தம்செய்ய வருகுவாய் ராஜனே.

அழகாபுரிராஜன் கவி

போரதுசெய்வேனென்று பெருத்ததோர்சேனையோடு
நேரதாய்சண்டைசெய்ய நிபுணனேவந்ததாலே
வாருதிபோல்திரண்டு வந்ததோர்சேனைதன்னை
சீரடாவில்வளைத்து சேனையைகொல்லுவேனே.

வசனம்

ஆனல் கேளடா மண்டலராஜனே! என்னைவெல்ல சாமர்த்தியம் இருந்தால் எதிர்த்து யுத்தம்செய்ய வருகுவாய் ராஜனே.



மண்டலராஜனுக்கும் அழகாபுரிராஜனுக்கும் யுத்தம்

மண்டலராஜன் தரு

வீரியம்பேசியதீரனே சற்றுநில்லடா
வில்லைவளைத்துபிடித்தேன் கையில்சொல்லடா

வில்வில்சரங்கோடிபாணந் தொடுத்தேனே
வீரிடயோடாதே விடுத்தேனே
வீரசேனைகளை மடித்தேனே
வெற்றிபெற்றகொடி பிடித்தேனே வீரி

அழகாபுரிராஜன் தரு

சேனைகள்தன்னைவீணாக மடித்தாய்ராஜனே
சின்னபின்னஞ்செய்குறேன் பார்ரோஷனே

சிலையதைகைதனில் எடுத்தேனே
சிங்கமுகபாணம் தொடுத்தேனே
சீறிவரும்பாணத்தை தடுத்தேனே
சிங்கம்போலவந்து எதிர்த்தேனே சே

மண்டலராஜன் தரு

சிங்கம்போலவேவந்துமே எதிர்த்ததீரனே
அங்கத்தைவெட்டி எறிகுறேன்பாரடாவீரனே

அண்டபுவனமும் பொடிபடவே
அமரர்முனிவர் பயந்திடவே
அக்கினிகணைவிட்டேன் சிதரிடவே
அரசனேயோடாதே கதரிடவே சிங்

அழகாபுரிராஜன் தரு

அக்கினிகளைதாக்கிசொரிந்தேன் மன்னனே
அடக்குறேனுந்தன்கெர்வந்தன்னை சொன்னேனே

ஆலகாலம்போல் சீரியே
அஸ்திரங்களைவிட்டேன் வாரியே
ஆனைபரிசேனைகள் வீரியே
அடித்துமேமடித்தேன் சாரியே அ

மண்டலராஜன் கந்தார்த்தம்

மன்னனேஎந்தனிட மாளாதசேனைதன்னை
சின்னபின்னமாக சிதரிடமடித்துப்போட்டாய்
உன்னைநான்விடுவதில்லை உம்பர்கள்துணைபெற்றாலும்
என்னிடதனுவிற்கு,

தரு

இறையதுகொடுப்பேன் உந்தனிட
சிரமதையறுப்பேன்
விரைவினில்சென்று திரமுள்ளசேனையை
வீறிடமடித்தேனே பாரடாமுன்னையே இ

அழகாபுரிராஜன் கந்தார்த்தம்

அரகராகைலைவாசா ஐயனேநான்என்னசெய்வேன்
சிரமதுயறுபடசேனையை மடித்துபோட்டான்
திரமுடன்சண்டைசெய்ய சேனையின்பலமுமில்லை
புரமுதுகிட்டுமிக்க,

தரு

பின்னப்பட்டுயோடினேன் பயங்கொண்டு
மன்னன்மிகவும்வாடினேன்
என்னநான்செய்வேனையோ எந்தன்நகரமதை
இன்றுகொள்ளையடித்து மன்னனும்செல்வானே பி

மண்டலராஜன் கவி

மந்திரிமாரேகேளீர் மன்னனும்பயந்தொளிந்தான்
இந்ததோர்மாளிகையில் இருக்கின்றதிரவியத்தை
அந்தமாய்கொள்ளையிட்டு அரசதைஒப்புக்கொண்டேன்
விந்தையாய்நமதுநகர் விரைவினில்செல்லுவோமே.

வசனம்

ஆனால் கேளும் மந்திரிமாரே! அரசன்பயந்து ஒளித்துக்கொண்ட படியால் அரண்மனையிலுள்ள பண்டுபண்டார சமஸ்தானத்தைக் கைப்பற்றினோம் நமது நகரம் செல்லுவோம் மந்திரிமார்களே.

பொது வசனம்

அகோதெப்படி யென்றால் மண்டலராஜன் தேசத்தைக் கைப் பற்றினதால் அழகாபுரிமன்னன் வறுமை அதிகரித்து பிழைக்கவழி யில்லாமல் வாசலில் அவரக்கொடியில் காய் அதிகமாகக் காய்த்தபடி யால் அதைவிற்று ஜீவனம் செய்துக்கொண் டிருந்தார்கள். அப்பொ ழுது பாக்கியவதி ராஜனைப்பார்த்து சொல்லுகிறவிதம் காண்க.

பாக்கியவதி தரு

நாதனேஎன்னசெய்வோம் நம்மிட நகரைபறிகொடுத்தோம்
சூதாகஅரசன்வந்து சூழ்ந்துகொள்ளையிட்டானே
ஆஸ்திபாஸ்தியில்லாமல் ஆண்டிபோல்ஆனோமே நா

அழகாபுரிராஜன் தரு

பெண்ணேநீவாடிடாதே எல்லாம் பரமன்செயலாகுமே
மண்ணைபறிகொடுத்தோர் மண்ணில்அனேகம்கோடி
எண்ணியஎண்ணம்போல் யாரும்வாழார்தேடி பெ

பாக்கியவதி தரு

செல்வமெல்லாம்போச்சுதே இப்போ ஜீவிக்கஇழிவாச்சுதே
எல்லையில்அவரக்காய் எத்தனைக்காலமாய்
மெல்லியாள்விற்றுவயர் வளப்பதுகோலமாய் செ

அழகாபுரிராஜன் தரு

முன்னால்செய்தவினைபடியே இன்னாள் அனுபவித்தோம்வாடியே
கன்னியேவீணாக கவலையும்கொள்ளாதே
கர்த்தன்செயலாகும் கடுந்துயர்விள்ளாதே மு

பாக்கியவதி கவி

சுந்திரபிராணநாதாசேயிழை ஒருஎண்ணம்கொண்டேன்
எந்தன்தமக்கையவள் இராஜகிரியில்வாழ்கின்றாளே
விந்தையுள்ளமாதிடத்தில் மைந்தனைதானனுப்பி
அந்தமாய்திரவியம்வாங்கி அன்புடன்வரச்சொல்வேனே.

வசனம்

ஆனால் கேளும் பிராணபதி! என் தமக்கையாகிய புண்ணியவதி ராஜகிரியில் இருக்கின்றாளே அவளிடத்தில் நமது மைந்தனாகிய ஞான சீலனை யனுப்பி திரவியம் வாங்கிவந்தால் ஜீவனம் செய்யலாம் நாதா.

அழகாபுரிராஜன் கவி

அப்படியானால்சரி அரிவையேயுந்தனிட
துப்புள்ளதமக்கையிடம் திரவியம்கொஞ்சந்தானும்
கப்பியேவாங்கிவர களிப்புடன்மைந்தன்தன்னை
இப்பவேயழைத்துவாராய் ஏந்திழையாளேநீயும்.

வசனம்

ஆனால் கேளும் பெண்ணே பாக்கியவதியே! நமது மைந்தனாகிய ஞானசீலனை சீக்கிரம் அழைத்து வருகுவாய் மாதே.



## ஞானசீலன் வருகிற கவி

தந்தையும்அழைத்தசேதி தனையனும்காதில்கேட்டு
சிந்தையும்மகிழ்க்ஷியாக சீர்பணியலங்கரித்து
அந்தமாய்தோழமார்கள் அன்புடன்வந்துசூழ
சுந்திரஞானசீலன் தந்தைமுன்வருகின்றானே.

### ஞானசீலன் தரு

விந்தைதனில்மிகுந்தபாலன் தந்தையைக்காண
வந்தேன்ஞானகுணசீலன்

அந்தமழகுடனே சுந்திரமாதர்கள்
சுருள் ஆசையாய்கவரி அரிவையர்வீச
நேசமாய்தோழர் நாடியேபேச வி

முத்துகுல்லாய்சிரசில்மின்ன தகதகென்று
ரத்தினபதக்கம்மார்பில்துன்ன

சத்துசித்தானந்த சங்கரன்பாதத்தை
சுருள் பத்தியாய்தினம் மெத்தவேதுதி
உத்தமதீரன் வெற்றியில்பதி வி

தந்தையழைத்தசேதிதன்னை இன்னதென்று
சுந்திரனறிந்திடமுன்னே

சிந்தைமகிழ்க்ஷியாக சேதிகளறிந்திட
சுருள் சுந்திரதீரன் விந்தையதாக
மந்திரிமார்களும் வந்துமேயேக வி

உம்பர்மனம்மகிழும்தீரன் மந்திரிசூழ
கெம்பீரமாகவந்தேன்வீரன்

அம்புவிதன்னில் செம்மங்குப்பம்நகரிவாசன்
சுருள் அன்பன்ஷண்முகம் கவிதனைபாடி
உன்னிததந்தையைக் காணவேதேடி வி

### ஞானசீலன் தரு

தந்தையரேயுந்தன்தாளடி போற்றினேன்
தனையனையழைத்தசேதி சொல்லும்தந்தையே

### அழகாபுரிராஜன் தரு

பாதம்பணிந்திட்டபாலனே சுகமாக
பாரினில்வாழ்ந்திருப்பாய் எந்தன்மைந்தனே

ஞானசீலன் தரு

அன்னையாளேயுந்தன் அடிதனைபோற்றினேன்
அன்புடனழைத்தசேதி சொல்லுமன்னையே

பாக்கியவதி தரு

திருவடிபணிந்திட்ட சுந்திரமைந்தனே
சுகமாகவேயுலகில் வாழ்ந்திருப்பாயே

ஞானசீலன் தரு

வாழ்குவாய்என்று வாக்களித்திட்டஅன்னையே
வரவழைத்தசேதிதன்னை சொல்லவேண்டுமே

பாக்கியவதி கவி

சுந்திரமைந்தாநீயும் சென்றுமேராஜகிரி
அந்தமாய்வாழ்கின்ற அன்னையுன்பெரியதாயை
சிந்தையும்மகிழ்ஷியாக திரவியம்கொஞ்சம்கேட்டு
விந்தையாய்வாங்கிக்கொண்டு மைந்தனேவருகுவாயே.

வசனம்

என் அருமை கண்மணியே! ராஜகிரி நகரில் உன் பெரியதாயாரிடம் சென்று நமது கஷ்டத்தைச்சொல்லி கொஞ்சம் திரவியம் வாங்கிவாரும் மைந்தனே.

ஞானசீலன் தரு

அன்னைமொழிதன்னைகொண்டுமே ஞானசீலன்
அன்புடனேதானடந்தானே ராஜகிரி
சென்னில்மணிமகுடம்மின்னிடவே விந்தையதாக
மன்னன்வேகமாய்தானடந்தானே சந்தோஷமாக
காடுசெடிமலைகள்தாண்டியே ராஜகிரி
களிப்புடனேவந்துசேர்ந்தானே தந்தானதன அ

ஞானசீலன் விருத்தம்

அன்னையேபெரியதாயே அழகுள்ளயுந்தன்பாதம்
கன்னியாளுந்தன்தங்கை கருத்துள்ளபாக்கியவதி
உன்னிதமாயளித்த உத்தமஞானசீலன்
மன்னியேமலரைச்சாற்றி மைந்தனும்பணிந்திட்டேனே.

வசனம்

சரணம் சரணம் எனது பெரிய அன்னையே உன்னிட தங்கை
ான பாக்கியவதி மைந்தன் சரணம் செய்தேன் அம்மா தாயே.

புண்ணியவதி தரு

அடிபணிந்தபாலனே அருமையுள்ளசீலனே
அிலத்திலேசுகமாக வாழ்ந்திடுவாய்பாலனே

ஞானசீலன் தரு

பெரியதந்தைகாணேமே புகலுவாயேஅன்னையே
பிரியமுடன்பார்க்கவேண்டும் புகலுவாயேமுன்னையே

புண்ணியவதி தரு

தந்தையிருக்கார்பாருமே தங்கைசுகமாகூறுமே
தனையனேவந்து ஒருமுத்தமதுதாருமே

ஞானசீலன் தரு

அரைகுவேனே அன்னையே அழகாபுரிதன்னையே
திரமுடனேவேற்றரசன் கொள்ளைகொண்டான்முன்னையே

புண்ணியவதி தரு

வறுமையாலேவாடியே வந்தபாலாதேடியே
கருத்துடனேவந்தசேதி கழறுவாயேநாடியே

ஞானசீலன் கவி

அன்னையேநகரமதை அரசனும்கைப்பற்றினன்
மன்னியேபிழைக்கவேறு வழியதுஇல்லாமல்
கன்னியாள்மிகவும்வாடி களிப்புள்ளயுந்தனிடம்
பொன்கொஞ்சம்வாங்கிவர பூவையும்அனுப்பினளே.

வசனம்

ஆனல் கேளும் தாயே! அரசன் நகரத்தைக் கைப்பற்றினதால் ஜீவனம்செய்ய வழியில்லாமல் கஷ்டமாய் இருப்பதால் உன்னிடம் கொஞ்சம் திரவியம் வாங்கிவரும்படி அன்னை அனுப்பிவைத்தார் தாயே.

### புண்ணியவதி விருத்தம்

வறுமையும்மிகவேகொண்டு வந்தஎன்மைந்தாகேளாய்
கருத்ததுவாடவேண்டாம் கஷ்டமும்நீங்கிஇனிமேல்
பெருகியேதானும்வாழ பூவையாள்மனம்மகிழ்ந்து
பொருளதுதந்தேனிதோ பெற்றுமேசெல்லுவாயே.

### வசனம்

ஆனல் கேளும் மைந்தனே! நீ விசனப்படவேண்டாம் நீங்கள் சுகமாக வாழ்ந்துவருவதற்கு இதோ திரவியம் தந்தேன் பத்திரமாக சென்று வாரும் மைந்தனே.

### ஞானசீலன் சிந்து

அன்னையிடம் பொருளைவாங்கி ஞானசீலன்
அன்புடனேவேகமாய்நடந்தானே ஓங்கி

மன்னியேகட்டமுதை கரம்பிடித்து
மலைவனம்தான் கடந்துவந்தான்நாடியே

வெய்யவன்உஷ்ணத்தாலே களைத்துநொந்து
பையவேகுளக்கரைநாடியேவந்தான்

தூய்யவேஜலத்தைக்கண்டு அமுதுண்ண
தண்ணீர்துறையதைதேடியேவந்தான். தந்தினம்

### ஞானசீலன் கவி

வந்ததோர்இளைப்பினலே நாவரக்ஷியும்மிகவேகொண்டு
சிந்தையும்மிகவாடி திரிந்துமேகானகத்தில்
அந்தமுள்ளகுளக்கரையில் அமுததுதானுமுண்ண
இந்ததோர்கல்மேல்பையை எடுத்துமேவைத்திட்டானே.

### பொது வசனம்

அகோ தெப்படி யென்றல் ஞானசீலன் பெரிய தாயாரிடம் வாங்கிவந்த திரவியமுடிப்பை குளக்கரையில் கல்லின்மேல் வைத்துவிட்டு அமுதுண்ணும்போது கெருடன் மூட்டையை எடுத்துக்கொண்டு போகிறவிதம் காண்க.

### கெருடன் கவி

கட்டமுதைமன்னன் களிப்புடனுண்ணும்போது
வட்டமிட்டுயரேபறந்த வலுவுள்ளகெருடன்தானும்

முட்டியேகல்லின்மேல் மூட்டையாவைத்தபொன்னை
திட்டென்றுஎடுத்துகொண்டு தீரமாய்சென்றிட்டானே.

ஞானசீலன் சம்பை தரு

ஐயோநான்என்னசெய்வேன் மெய்யும்பதருதையோ
பையவேகருடன்வந்து பணப்பையைக்கொண்டுசென்றான்

எந்தனிடபெரியஅன்னை சிந்தைநோகபேசுவாளே
சுந்திரனும்என்னசெய்வேன் தெய்வமேயுன்செயலோ

சேதிகளை தானுரைக்க சீக்கிரம்ராஜகிரிநகரம்
சிறுவனும்தானும்யோடி சீக்கிரம்வந்துசேர்ந்தான் ஐ

ஞானசீலன் முகாரி விருத்தம்

அம்மணிதாயேகேளாய் ஆரண்யம்தான்கடந்து
வெம்பியேபசியால்வாடி விந்தையுள்ள தடாகம்தங்கி
நம்பியேமூட்டைவைத்து நானுமேஅமுதுயுண்டேன்
எம்பிரான்கெருடன்மூட்டை எடுத்துமேசென்றானம்மா.

வசனம்

ஆனல் கேளும் தாயே! கட்டமுது யுண்ணும்படியாக ஓர் தடாகம் சென்று கருங்கல்மேலே திரவியமூட்டையை வைத்துவிட்டு அமுது அருந்தினேன் கெருடன் மூட்டையை எடுத்துச்சென்று விட்டானம்மா தாயே.

புண்ணியவதி கவி

பாலனேவிசனங்கொண்டு பதரியேஅழுகவேண்டாம்
சீலனேவேணபொருள் சிதராமல்கட்டித்தந்தேன்
காலமுங்கெட்டதாலே கவனமாய்வனங்கடந்து
கோலமாயுந்தன்நகர் களிப்புடன்செல்வாய்தானே.

வசனம்

ஆனல் கேளும் மைந்தனே நீ விசனம்கொள்ளவேண்டாம் உனக்கு வேண்டிய திரவியம் மூட்டைகட்டித்தந்தேன் சென்றுவாரும் மைந்தனே.

பொது வசனம்

அகோ தெப்படி யென்றால் பெரிய அன்னையிடம் திரவியம் வாங்கி ஞானசீலன் வரும்போது திருடர்கள் வருகிறவிதம் காண்க.



## திருடர்கள் வருகிற கவி

காட்டதைவிட்டுமன்னன் நடந்துமேவேகமாக
காட்டையும்வருகும்போது கண்டுமேகள்ளர்தானும்
மூட்டையைகளவுசெய்ய மனதினில்தான்நினைந்து
தேட்டைபோடும்திருடரும் வருகின்றாரே.

### திருடர்கள் தரு

தினதந்தினாதினதந்தினா தினதந்தினாதினனா
தினதந்தினாபாட்டைபாடி தேட்டைபோடுவோமே
வனமதிலேவசிக்கின்ற கள்ளர்நாங்களேஎப்பாடா
கள்ளர்நாங்களே இங்கே
வருகுவோரையடித்துமூட்டை பறிப்போம்நாங்களே
கோட்டைகொத்தளமீதிலேறி வாட்டமாய்குதிப்போம்
எப்பாடாஓட்டமாய் குதிப்போம்
கண்டுஎங்களைபிடிக்கவந்தால் துண்டாகமடிப்போம்
அஞ்சாநெம்பர்பேரைசொன்னால் யாரும்நடுங்குவார்
எப்பாடாபாரில் ஒடுங்குவார்
ஆகாஇன்றுநாட்டைசென்று தேட்டைபோடுவோமே தி

திருடர்கள் ...

... ஒருமையாய்வீற்றுமிக
ஓங்கிமய..வாழ்கின்ற சாமுண்டிகருப்பன்வீரா
தங்கியேசாராயங்களும் வைத்துமேபடைத்திடுவோம்
நாங்களும்களவுசெய்தால் நாடியேகாட்டிடாதே,

ஞானசீலன் தரு

அன்னையாள்கொடுத்தமுட்டை அன்புடனேகையில்கொண்டு
மன்னியேவேகமாக மன்னனும்தான்நடந்தான்
மலைவனம்தனைகடந்து மயங்கியேமனதுநொந்து
இலகும்பணிகுலுங்க இருண்டவனம்தான்கடந்தான்

திருடர்கள் கவி

ஆரடாபைபலேநீ அச்சமும்பயமும்பயமில்லாமல்
சீரடாகானகத்தில் செல்கிறாய்நில்லுநில்லு
பாரடாவைத்திருக்கும் பணப்பையைகொடுக்காவிட்டால்
நேரடாயுந்தனை நையவேஅடிப்போம்தானே.

ஞானசீலன் தரு

ஐயையோஎன்செய்வேன்தெய்வமே இந்த
ஆரண்யந்தன்னிலே தெய்வமே
பையவேதிருடர்கள் பலபேரும்கூடியே
பணத்தைபரிக்கவே பேசுறார்நாடியே ஐ

திருடர்கள் தரு

எந்தஊர்மன்னன்நீநில்லடா நீயும்
எங்கிருந்துவாராய் சொல்லடா
உந்தனைவிடமாட்டோம் ஓடாதேநில்லுமே
சிந்தையும்நோகாமல் திரவியந்தாருமே எ

ஞானசீலன் தரு

ராசகிரிநகர்சென்றுமே பெரிய
நேசயன்னையிடம் இன்றுமே
பாசமாய்திரவியம் பையொன்றுவாங்கியே
பாலனும்செல்கிறேன் பாருமேதாங்கியே ரா

திருடர்கள் தரு

ஓடாதேராஜனேவிட மாட்டோம் இப்போ
உந்தனுக்குப்பயப் படமாட்டோம்
கேடிகொண்டுவந்த திரவியந்தன்னையே
தி[illegible]பரிக்கு ஓடினோம்முன்னையே ஓ

ஞானசீலன் [illegible]

என்னநான்செய்வேனையோ இந்தகானகம
இருக்கின்றதிருடர்வந்து தெய்வில்

பொன்களையெல்லாம் பறித்துமேசென்றாரே
பெரும்பாவியானனே தெய்வமே

பெரிய அன்னையிடத்தில் போய்நான்சொன்னாலே
பொய்யென் றநினைப்பாளே தெய்வமே

சிரசில்மதியணிந்த பரமனேயுன்செயல்தானோ
தீவினைநேர்ந்ததேஇன்று தெய்வமே ஓ

ஞானசீலன் கவி

அன்புள்ளயன்னையாளே அய்யோநான்என்னசெப்வேன்
மன்னியேகானக மார்க்கம்நான்போனபோது
கன்னமிடுங்கள்ளர்வந்து கடுமையாய்வார்த்தைபேசி
பொன்னதைதான்பறித்து போயுமேயொளித்தாரம்மா.

புண்ணியவதி தரு

பொருள்போனால்போகட்டும் மைந்தனே நீயும்
புலம்பியேவாடாதே மன்னனே
கருத்துடனுன் தாயார் கேதாரிவிரதமும்
கன்னிசெய்கின்றாளோ கழறுவாய்மைந்தனே பொ

ஞானசீலன் தரு

கேதாரிவிரதத்தை யன்னையாள் அவள்
கொள்ளவும்இல்லையே கன்னியாள்
நூதனமாய் நூற்கும் நோன்புகயரையறுத்து
நல்லஅவரைமீது நாரிபோட்டாள்வெருத்து கே

புண்ணியவதி தரு

ஆதியில்தெய்வ கன்னியும் அவர்
அன்புடன் தந்திட்ட நோன்பையும்
பாதியில்மறந்ததால் பாக்கியவதியாளும்
பெருமைகுலைந்துமே செருமையும்பட்டாளே ஆ

ஞானசீலன் தரு

செல்வம்மிகுதியாய் இருக்கவே அன்னை
தெரியாமல்மறந்தாளே பெருக்கவே
நல்லகேதாரிநோன்பை நூற்கவேஇனி
நாடிஅன்னையிடம் தேடிசொல்வேன் தனி செ

புண்ணியவதி கவி

ஐப்பசிமாதத்தில் கேதாரி நோன்பு
அன்புள்ள மைந்தனே வந்ததாலே
துப்புள்ள விரதத்தை முடிக்கவேண்டி
தையலும் அதற்குவேண்டும் சாமான்வைத்து
தப்பாம லுந்தனிட தாயாருக்கும்
தனிமையாய் நோன்பு நூற்றுவைத்தேன்
கப்பியே நோன்பும் முடிந்ததாலே
கவனமாய் யாவையும் எடுத்துசெல்வாய்.

வசனம்

ஆனால் கேளும் மைந்தனே! உன்தாயானவள் கேதாரி விரதத்தை மறந்தபடியால் இப்பேர்ப்பட்ட வறுமைகாலம் வந்தது ஆதலால ஐப்பசிமாதம் கேதாரி நோன்பு வந்தபடியால் மூன்றுநாள் விரதத்திற்கும் வேண்டிய பண்டங்களை சேகரம்செய்து வைத்தேன் உன் தாயாருக்கும் நோன்புநூற்று பாக்கு வெத்திலை பழம் மஞ்சள் முடிகயறு யாவுங்கொடுத்தேன் இந்த திரவியத்தை எடுத்துக்கொண்டு உன தாயாருக்குக்கொடுத்து நோன்பை தவறாமல் இருக்கச்சொல்லும் மைந்தனே.

ஞானசீலன் தரு

அன்னையிடத்தில்விடையும்பெற்றுமே ஞானசீலன்
அன்புடனேதான்நடந்தானே சந்தோஷமாக

நோன்புவிரதம்தனைமறந்ததால் இந்தகஷ்டம்
நாளும்வந்துசூழ்ந்ததென்றுமே விந்தையாக

கானகம்மலைவனங்கள்கடந்துமே ஞானசீலன்
கடுகநடந்துவேகமாகவாரானே மூட்டைஎடுத்து அ

கெருடன் வசனம்

ஏ ராஜமன்னா உன்னுடைய திரவியம் இதோ தந்தேன் பெற்றுக்கொள்.

திருடர்கள் வசனம்

ஆனால் கேளும் ராஜமன்னனே உந்தன் திரவியத்தை நாங்க சிலவுசெய்யவில்லை இதோ தந்தேன் பெற்றுச்செல்லும்.

ஞானசீலன் கவி

விரதத்தைபெரியஅன்னை விடாமல்எடுத்ததாலே
பரிகொடுத்தபொன்னை பாசமாய்தான்கொடுத்தார்

சரிசரி இனிமீது சஞ்சலம்நீங்கிபோச்சு
பிரியமுள்ள தந்தை தாயை புனிதனும்காணுவேனே.

ஞானசிலன் தரு

அன்னை தந்தையேசரணம் எந்தனைபெற்ற
அன்னை தந்தையேசரணம்
அன்னையேபெரிய தாயார் அளித்தால்திரவியம்பாரும்
இன்றோடநமக்குபஞ்சம் இல்லையேமனம்தேறும் அ

அழகாபுரிராஜன் தரு

மைந்தனே சுகமாய்வாழ்குவாய் பாதம்பணிந்திட்ட
மைந்தனே சுகமாய்வாழ்குவாய்
சந்தோஷம்கொண்டேனப்பா திரவியம்தன்னைகண்டு
சுந்திர மைந்தனே சிறப்பாய்வாழ்கலாம்கொண்டு மை

ஞானசிலன் தரு

கேதாரிவிரதம்தன்னையே அன்னையேநீரும்
கேதாரிவிரதம்தன்னையே
கேதாரிவிரதத்தை கன்னிநீமறந்ததால்
வேதனைபட்டுமே வாழ்ந்தோமேபுவிமீது கே

பாக்கியவதி தரு

செல்வம்மிகுந்துவாழ்ந்ததால மைந்தனேகேளும்
செல்வம்மிகுந்துவாழ்ந்ததால்
செல்வம்மிகுந்ததாலே தெரியாமல்கேதாரி
நல்லவிரதநோன்பை நானும்மறந்தேன்நாரி செ

ஞானசிலன் கவி

அம்மணிநீமறந்த அரிதானகேதாரிநோன்பை
நம்பியேபெரியதாயார் நல்லதோர்நோன்பை நூற்று
செம்மைகயறுநோன்பு தின்பண்டமும்தந்தாரம்மா
வெம்பியேவிடாமல்நோன்பை விடாமல்இருப்பாய்தாயே.

வசனம்

ஆனல் கேளுமம்மா தாயே! கேதாரிநோன்பு விரதத்தை நீ மறந்து விட்டபடியால் பெரிய தாயார் நோன்புநூற்று முடிகயரும் தின்பண்டமும் திரவியமும் தந்தாள் நீ கேதாரி நோன்பு எப்பொழுதும் தவராமல் இருப்பாய்தாயே.

பொது வசனம்

அழகாபுரி பட்டணத்தை கைபற்றின மண்டலராஜன் நோன்பு பலத்தினல் நகரை அரசனிடம் ஒப்புக்கொடுக்கிற விதம் காண்க.

மண்டலராஜன் கவி

மன்னனேகேளாய்நீயும் மகிழ்ஷியாய்ஆண்டநகரை
மன்னனும்கொண்டேனென்று மனதினில்விசனம்வேண்டாம்
மன்னனேமுன்போல்நீ மகிஷியாய்நகரையாள
மன்னனும்தந்தேனிதோ மணிமுடி தாங்கியாள்வாய்தானே.

வசனம்

ஆனல் கேளும் அழகாபுரி மன்னனே! உன்நகரை நான் கைபற்றின படியால் நீ அரசுபுரிய மறுபடியும் உன்னிடம் பண்டு பண்டாரொக்கமும் அரசும் ஒப்பு கொடுத்தேன் சுகமாக வாழ்குவாய் மன்னனே.

பொது வசனம்

அகோ தெப்படியென்றல் கேதாரி ஈஸ்வரர் நோன்பு பலத்தி[illegible] அழகாபுரி ராஜனுக்கு கைவிட்டு போனபொருளும் அரசும் திரும் வந்துவிட பிறகு அழகாபுரிநகரை சுகமாகவாழ்ந்துகொண்டு இருந்தா[illegible]கள் இந்த நோன்பை உலகிலுள்ளமாதர்கள் விடாமல் அனுசரித்தா[illegible] செல்வம்பெருகி சுகமாக வாழ்குவார்கள்.

## வாழி விருத்தம்

சீரோங்கும்கைலைவாழ் பெருமானேடு
சிறந்தோங்குஞ் சத்திவாழி
காரோங்குந்திருமருவும் மார்பனேடு
கணேசனும் முருகன்வாழி
பாரோங்கும்கேதாரி நோன்பு நூற்கும்
பரிவுள்ளமாந்தர் மிகவும்வாழி
பேரோங்கும்சென்னை பூமகள்விலாசம்
போாதசிறப்போ டென்னுளும்வாழிவாழி.

## கேதாரிஈஸ்வரர் நோன்பு நாடகம்

முற்றிற்று.

---

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1935.